
# திராவிடநாடு

30-12-56 | வார வெளியீடு | விலை 2 அணா


தியாவிலேயே சென்னை மாகாண மக்கள்தான் குறைவாக
பாதிக்கிற நிலையில் இருப்பவர்கள், ஆனால் அவர்கள்
செலுத்திக் கொண்டிருக்கிற வரியோ மிக அதிகம்!"
நிதி அமைச்சர்:— சி. சுப்பிரமணியம்.

★

பரதவிக்கிறது நாடு! பண்டித நேருவோ, உலகப் பவனி வருகிறார். பாராட்டும் வரவேற்பும் பெறுகிறார். வறுமைக் கடலில் வாடிக்கிடக்கும் நாட்டில் 200 கோடி ரூபாய்க்காக எத்தனை முறைவேண்டுமானாலும் வரி விதிப்பேன் என்கிறார், டி. டி. கிருஷ்ண மாச்சாரி. சென்னை அரசினர் தயாரித்து சட்ட சபையில் விவாதிக்கப்பட்ட பட்ஜட்டில் புதிய வரிப் பிரேரேபணைகள் இல்லை. ஆனால். 5-கோடி துண்டுவிழுவது, தேர்தலுக்குப் பிறகு வரப்போகிறவர்களின் பொறுப்பு என விடப் பட்டிருக்கிறது. அதாவது, எதிர்காலத்தில், வரிவரி என்று மேலும் நாட்டை காங்கிரசாட்சி பதவிக்கு வந்தால் — அலைத்துக் குலைக்கும் என்கிற அறிகுறி தெரிகிறது!

இந்தியாவிலேயே, அதிகவரி செலுத்துவோர் நாம் என்று நிதியமைச்சர் முன்போர்முறை சொல்லியிருக்கிறார். அதை மக்களுக்குக் கவனமூட்டவே, மீண்டும் இந்தக் காட்சியை வெளியிட்டிருக்கிறோம். வாய்ப்புள்ள கழகத் தோழர்கள் படத்தைப் பெரிதாகத் தீட்டி, ஆங்காங்கு வைக்கலாம்.

★

# செய்திகள்

## இன்னெரு களங்கம்

✶

பிரிட்டன், பிரான்சு, ஈராக் இம்மூன்றும் சேர்ந்து சிரியா அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்ததாகவும் அதற்கு முன்னுள் சிரியாத்தலைவரும் ஏழு பார்லிமெண்டு உறுப்பினர்களும் பல இராணுவத் தலைவர்களும் ஒத்துழைத்ததாக மொத்தம் 47-பேர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, சிரியா சர்க்காரால். இஸ்ரேல்மீது படையெடுப்பதில் சிரியாவின் துருப்புகள் மும்முரமாகயிருக்கும்போது உள்நாட்டில் அரசைக் கவிழ்ப்பதென்பது இவர்கள் திட்டமாம். மத்தியக் கிழக்கில் பிரிட்டனுக்கு ஏற்படும் இன்னெரு களங்கமாகும், இது.

✶

## சைப்ரஸ் பிரச்னை

✶

கிரீசுடன் சேரவேண்டுமெனச் சொல்லி சைப்ரஸ் மக்கள் போராடிக்கொண்டு வருவதும், அவர்களது தலைவரான மகாரியாஸ் பாதிரியாரை ஒரு தீவில் கொண்டு போய் பிரிட்டிஷ் அரசாங்கம் வைத்திருப்பதும் அறிவோம் அத்தீவுக்கு புது அரசியல் வழங்குவதாகச் சொல்லி பிரிட்டிஷ் அரசு ராட்கிளிப் என்பாரை ஒரு திட்டம் தீட்டச் சொல்லிற்று. சைப்ரசில், துருக்கியைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றனர்—கிரீசைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். ஆனல், அதிகம்பேர் கிரேக்கர்கள்தான். கிரேக்கர்-துருக்கியர் ஆகியோரின் மக்கள் தொகை அடிப்படையில் பார்லிமெண்டில் இடங்கள் அளிப்பதென்றும், சிலரை பிரிட்டிஷ் அரசாங்கம் நியமிக்கலாமென்றும் கூறும் ஒரு அரசியலமைப்பை வெளியிட்டிருக்கிருர். இந்த அரசியல் திட்டமூலம் தமதுகோரிக்கை நிறைவேற்றப்படவில்லை யென்றும், பிரிட்டிஷ் பிடி இருக்கச் செய்யப்படும் சதியென்றும் கிரீஸ் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை எடுத்துக்கொண்டு தீவில் கிடக்கும் மகாரியாசிடம் பிரிட்டிஷ் அரசு தூதுவர்களை அனுப்பியுள்ளதாம் முதலில் எமது தலைவராம் மகாரியாசை எம்மிடம் கொண்டுவந்துவிடு, பிறகு யோசிக்கலாம் உன் திட்டத்தை என்கின்றனராம் சைப்ரஸ் சுதந்திர இயக்கத்தினர். அதை நிறைவேற்ருமல் கண் துடைக்க முயலுகிறது, பிரிட்டன்.

✶

## மற்ரெரு கெட்டபெயர்!

✶

பாரசிகக் குடாவுக்கருகில் பஹ்ரைன் என்ரெரு இடம் இருக்கிறது. இதை ஷேக்சர் சுல்மான் பீன் அஹமதுகாலிபா என்பார் பிரிட்டிஷ் ஆலோசகரின் உதவியோடு ஆண்டு வருகிருர். இங்கு, இந்தக் கிழமை மூன்று தேசியத் தலைவர்களுக்கு பதினுன்கு ஆண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. சூயஸ் கால்வாயில் பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கியதைத் தொடர்ந்து, இங்கே பிரிட்டிஷாருக்கு எதிரான கலகங்கள் நிகழ்ந்தன. அந்தக் கிளர்ச்சிகளுக்கு ஈடு பட்டதற்காகவே இவர்களுக்கு இத்தண்டனை. வழக்கு மன்றத்தில் மன்னரைக் கொல்ல சதிசெய்ததாகவும், அரசைக் கவிழ்க்க முயன்றதாகவும் எடுத்துக் கூறப்பட்டது. பஹ்ரைன், பிரிட்டிஷாரின் எடுபிடி நாடாகயிருப்பது கூடாதெனத் தாங்கள் எதிர்த்ததற்காகவே இந்தப் பழியும் தண்டனையும் அளிக்கப்படுகிறதென்று தெரிவித்தவண்ணம் அம்மூவரும் சிறைக்குச் சென்றுள்ளனர். இந்நிகழ்ச்சி பிரிட்டிஷார்மீது மேலும் மக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்காமலா போகும்?

✶

## வேதனைக் காட்சி

✶

"...இதைவிட எங்களைச் சுட்டுத் தள்ளுங்கள். அது மிகவும் மேலானது'' என்று டாடு என்பார் தெரிவித்திருக்கிருர். இவர், தென் ஆபிரிக்க காங்கிரசின் தலைவர். இந்தக் காங்கிரசை, தென் ஆபிரிக சர்க்கார் சட்ட விரோதமாக்கியுள்ளது. வெள்ளையரும் கருப்பரும் தனித்தே வாழவேண்டும் என்று கூறும் சட்டமொன்று ஆப்பிரிக்க கம்யூனியன் முன் இருக்கிறதல்லவா? இச் சட்டப்படி தென் ஆப்பிரிக்காவின் வளமான நகரமான க்ருகர்ஸ்ட்ராவ் என்பதையே காலி செய்துவிட்டு வெளியேறும் நிலையில் உள்ளார்களாம், இந்தியர்கள். சுமார் 700 குடும்பங்கள், இங்கேயே குடியேறி, வீடுவாசல் கட்டிக்கொண்டு வெகு காலமாக இருந்து வருகிருர்கள். இவர்களனைவரும் தத்தமது வீடு வாசலை இழந்து புதுச் சட்டத்தால் வீதிகளில் விரட்டப்படுகிருர்கள். இதற்குப் பதில் எங்களைச் சுட்டுத் தள்ளுங்களேன் என்று வேதனையோடு குமுறுகிருர் டாடு. இப்படி அட்டகாசம் செய்யும் வெள்ளையர், பிரிட்டிஷாரின் பிடியிலிருப்பவர்கள், இந்தியா அங்கம் வகிக்கும் காமன்வெல்தில், தென்ஆபிரிக்காவும் இருக்கிறது, நிலைமையோ இது.

✶

## ஆனல்...!

✶

அமெரிக்கா செல்வதற்கு முன்னும் பின்னும் ஆங்கில நாட்டுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் நேரு அறிவிக்கிருர், காமன்வெல்த் தொடர்பிலிருந்து இந்தியா ஒரு போதும் வெளியேருது என்று. காமன்வெல்த்துக்குத் தலைமையான பிரிட்டனின் போக்கும் அதன் ஆதரவில் வாழும் இதன் ஆபிரிகாவின் போக்குமோ இப்படி ஆதிக்கம் செலுத்துவதாக இருக்கிறது'' அன்பர் நேரு வர்ணிக்கும் பிற்போக்கு கட்சியான இந்துமகா சபைகூட காமன்வெல்த்தைவிட்டு இந்தியா வெளியேற வேண்டும் என்கிறது — உலகுக்கே விடுதலை போதனை புரிபவராகக் காட்சிதரும் நேருவோ, கூடாதென்கிருர்— கூட்டாக வாழவேண்டுமென்கிருர். இதற்கு என்ன விளக்கம் தருவரோ தேசியத் தோழர்கள்?

✶

# பாராட்டுகிறோம்-ஆனால்......!

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [30—12—56] தனிப் பிரதி 2 அணா [இதழ் 26

நிதியமைச்சர் தனது பட்ஜட்டை, தமிழில் சமர்ப்பித்தாராம் சட்டசபையில்.

நிதியமைச்சரும், முதலமைச்சரும் தமிழாக்கம் செய்யப்பட்ட பல சொற்களைக்கொண்ட நூலொன்றின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டனராம்.

தமிழின்மீது தமக்கிருக்கும் பற்றையும் பாசத்தையும் காட்டிக்கொள்ளுமுகத்தான் புது மசோதா ஒன்றையும் கொண்டுவந்திருக்கிறது, சென்னை சர்க்கார். அதன்படி இனிப் படிப்படியாகத் தமிழே ஆட்சிமொழியாகுமாம்!!

மகிழ்கிறோம், செய்திகள் அறிய. அதே சமயத்தில் இவ்வளவு செய்யும் இவர்கள் ஏன் தமிழ்நாடு என்று பெயரிடத் தயங்குகிறார்கள், என்கிற கேள்வி, நாட்டின் நாலு மூலைகளிலிருந்தும் கிளம்பாமலில்லை.

''எல்லாம் எலெக்ஷன் தந்திரம்!,'' என்று இவர்தம் செயல்கண்டு கூறுவோரும் உளர். எனினும் நாம் பாராட்டுகிறோம்; இந்தளவுக்காவது, 'எலெக்ஷன் ஜுரம்' நாட்டுக்குச் சில நன்மைகளைச் செய்யும்படி இவர்களைக் கொண்டுவந்திருப்பதற்காக. ''எலெக்ஷன் ஜுரம்,'' காங்கிரஸ் அரசினருக்கு வரக்காரணம், நாம்தான் என்று பெருமை பேசிக்கொள்ளவில்லை. நாடு, அறியும் இதனை.

இவ்வளவு அமர்க்களமாக தமிழின்மீது தங்களுக்குள்ள பற்றையும் பாசத்தையும் இவர்கள் காட்டிக்கொள்ள, இத்தனை நாளானது வேண்டுமானால் விந்தையாக இருக்கலாமே ஒழிய, இவர்களது இன்றைய நடவடிக்கைகளை ஒரு அதியற்புத சாதனை எனக் கருதார், தமிழர்கள், எனினும் மகிழ்கிறோம், பாராட்டுகிறோம்.

அதே சமயத்தில் இன்னொரு ஐயம் புகுந்து குடைகிறது, நம்மை. இவர்கள் தமிழுக்கு அஞ்சலி செய்வது சரி! அப்படிச் செய்ய இவர்கள் கடமைப்பட்டவர்கள்!

ஆனால், இவர்களுக்கு எஜமானர்களாக உள்ள டில்லியினர், தமிழைப் பற்றி என்ன கருதுகின்றனர்? கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ், என்பர் புலவர் பெருமக்கள். தொல்காப்பியமும், அகமும் புறமும், திருக்குறளும் சிலம்புச் செல்வமும் தமிழிலன்றி வேறு மொழியிலேது, என்று கேட்பர் நாவலர்! இந்திய உபகண்டத்திலேயே பழைய மொழி தமிழ், அதன் தொன்மையையும் மென்மையையும் எடுத்துரைக்க இயலாது என்று நாவோசை எழுப்பிடும் நல்லறிவாளர்கள் ஏராளம் இருக்கிறார்கள். உண்மையும் அதுதான்.

அப்படிப்பட்ட தமிழினைப்பற்றி வடவர் என்ன கருதுகின்றனர்? ''செச்சே! உன் புத்தி உன்னை விட்டுப் போகாது-ஆயிரமாயிரம் தடவை எழுதிய அதே விஷயத்தைத்தானே சொல்லப்போகிறாய். கார்டில் இந்தி! காசு பணத்தில் இந்தி! பொதுமொழி இந்தி!—என்று சதா கூறிடும் புகாரினைத்தானே புலம்பப் போகிறாய்'' என்று பாயக்கூடும் தேசீய அன்பர்கள். அதனையல்ல நாம் இப்போது எடுத்துக் காட்டுவது. சென்னை சர்க்காரின் எஜமானர்கள் நம் அருந்தமிழ் மொழியினைப்பற்றி என்ன கருதுகின்றனர்? கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், துளுவும் உன்னுதிரத்துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும் ஆரியம்போல் வழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறன் வியந்து செயன் மறந்து வாழ்த்துதுமே என்றார் பேராசிரியச் சுந்தரனார்! ஆனால் டில்லி என்ன சொல்லுகிறது தெரியுமா!

இந்தியாவின் பல்வேறு பகுதி மொழிகளெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்துதான் தோன்றினவாம்.

அனைத்திந்திய சமஸ்கிருதசாகித்திய சம்மேளனத்தின் தொடக்க விழாவாற்றிய இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் டாக்டர் கட்சு இவ்வண்ணம் தெரிவித்துள்ளார்.

சமஸ்கிருதத்திலிருந்துதான் தோன்றினவாம்! அமைச்சருக்கு சமஸ்கிருத மொழிக்கு 'உயர்ந்த ஆசனம் அளிக்கவேண்டுமெனும் ஆசை வருகிறது — அதனால் ஒரேயடியாகப் புகழ்கிறார்!!

அதே மாநாட்டில் கலந்துகொண்ட நந்தா எனும் இன்னொரு டில்லி அமைச்சர், ''சமஸ்கிருதம் என்ற ஒரே மொழியின் மூலமாகத்தான் இந்தியாவின் ஆன்மீகப் பேரறிவை அடைய முடியும்'' என்று பேசியிருக்கிறார். சமஸ்கிருதம் என்கிற ஒரே மொழியின் மூலம்தான் அடைய முடியுமாம்! வடமொழி மீது அவ்வளவு பற்று அமைச்சருக்கு! பேசட்டும்.

''இவ்விரு கூற்றுக்களும், மொழியியல் நூல் வல்லுநர்களும்; ஆன்மீகப் பெரு நெறியாளர்களும் ஏற்றுக்கொள்ள இயலாதவை. தமது கடமைக்கும் ஆராய்ச்சிக்கும் புறம்பான கருத்துக்களை அமைச்சர்கள் வெளியிடாமல் இருப்பதே சிறந்ததாகும். ஏனென்றால் சமஸ்கிருதத்துக்கு சிறப்பளிப்பது என்று முனைதென் தமிழின் சிறப்பையும் உன்னதத்தையும் மறைமுகமாக மறுப்பதாகும்'' என்று மதுரையிலிருந்து வரும் 'தமிழ்நாடு' ஏடு குமுறுகிறது.

தமிழுக்கு 'யோகம்' வந்திருக்கிறது என்கின்றனர் நம்மவர்கள்; டில்லியோ தமிழின் தொன்மையை, சிறப்பை, மறைமுகமாக மறுக்கிறது.

தமிழின் புராதனச் சிறப்பை, கடல்கடந்து சென்று வாழ்ந்த புகழை, எடுத்துச் சொல்லி அது மீண்டும் வர வேண்டுமென வாதாடுகிறோம் நாம்! அது குத்துகிறது, குடைகிறது வடவரை—மறைமுகமாக மறுக்க மார்க்கங்கள் தேடுகின்றனர். அதன் காரணமாகவே தமிழ் மொழியின் பேரால் 'தமிழ் நாடு' என்று பெயரிடவும் டில்லி அனுமதி அளிக்கவில்லை, இவர்களுக்கு.

இதோ இன்னொரு டில்லி அமைச்சர் ஜகஜீவன்ராம் புதிய யோசனையொன்றை வெளியிடுகிறார் "இந்தியாவுக்கு இந்தி பொதுமொழியாக இருந்துவிட்டால் மட்டும் போதாது. இங்கேயிருக்கும் சகல மொழிகளுக்கும் பொதுவான எழுத்தும் இருக்க வேண்டும். அதற்கு ஏற்றது தேவநாகிரி லிபிதான். இதில் எல்லா மொழிகளின் எழுத்துக்களையும் அமைத்துக்கொண்டால் சகலரும் அறியவும் உணரவும் வாய்ப்பு ஏற்படும்."

இந்தி அரசியல் மொழியாக அரசோச்சுவது போதாதாம்! தமிழ் போன்ற செல்வத் திரு மொழியின் எழுத்துகளை தேவநாகிரிலிபியில் எழுதவேண்டுமாம்!! அ, ஆ, இ என்கிறோமே இவைகளுக்குப் பதில் தேவநாகிரி வரவேண்டுமாம். பூனாவில் இந்திக் கூடம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

மத்ய அமைச்சர்களின் மனப்பான்மை எப்படியிருக்கிறது என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு என்னவேண்டும்? எஜமானர்களின் சுபாவம் இப்படியிருக்கிறபோது, எப்படி தமிழ் வாழும், வளரும்?

இங்கேதமிழின்சிறப்பைதமிழிலுள்ள முத்தமிழின் அழகை, தமிழ் வேந்தர்களின் புகழை, தமிழகத்தின் தனி நாகரீகத்தை, தமிழினத்தின் தனிக் குணத்தை—எடுத்துப் பேசுவதும் எழுதுவதும், வடவருக்குக் கொஞ்சங் கூடப் பிடிப்பதில்லை, இந்த ஒரு காரணத்துக்காகவே, நம்மை, துவேஷிகள் என்றும் பேதமூட்டுபவர்கள் என்றும் பேசுகின்றனர்.

மொழியின் பெயரால் ஒரு நாடு அழைக்கப்படக்கூடாது என்பதற்காகவே டில்லி, தமிழ்நாடு எனும் பெயரிட மறுத்தது. அவர்கள் மறுத்ததாலேயே, காமராஜரும், இங்கேமறுக்கிறார்! இந்தஉண்மையை இங்குள்ள ஒவ்வொருவரும் அறிவர்.

இப்படிப்பட்ட எஜமானர்கள், நம்மைத் தாழ்த்துவதை நோக்கமாகக் கொண்டவர்கள், உயர்ந்த இடத்தில் உட்கார்ந்திருக்கும்போது, அவர்கள் கட்டளைக்குத் தாசானுதாசனாக அடிபணியும் நிலையில் காமராஜர்கள் காத்துக்கிடக்கும்போது, எப்படி தமிழ் வாழும்! தமிழகம் தழைக்கும்!

புதிய 'யோகம்' பிறக்கிறது என்போர், சிந்திக்க வேண்டும். இந்த யோகம், மங்களமாக முடியுமா என்று யோசித்தால், அச்சமும் துயரமுமே உருவாகிறது. ஏனெனில் டில்லி ஒருபோதும் நமது புகழை ஒப்பாது! எடுத்துச் சொன்னால், இப்படியெல்லாம், தமிழன்—தமிழன் பெருமை—இமயத்தை வென்றான்—கங்கையைக் கொண்டான்—என்று பிரித்துப் பேசலாமா? இந்தியன் என்று சொல்லுங்கள்! அதுவே ஐக்கியம் தரும்! என்று போதிக்கும்.

அப்படிப்பட்ட டில்லியின் கட்டளைக்கு அடிபணிந்து கிடக்கும் வரை, தமிழுக்கு உண்மையான உயர்வு ஒருபோதும் வர முடியாது.

★

# இருபுறமும் இடி!

********

"வாரச் செய்தி" எனும் ஏடு, எழுதுகிறது இப்படி—நமது இயக்க ஏடு அல்ல, அது.

"நம்நாட்டிற்கு மாநிலஅரசு என்றும் மத்தியஅரசு என்றும் இரண்டு அரசுகள் இருப்பது எதற்காகத் தெரியுமா? மாநில அரசு நம் பகுதியை ஆள்வது; மத்திய அரசு இந்தியப் பகுதிகள் அனைத்தையும் ஆள்வது. இவை இரண்டும் ஒன்றற்கு ஒன்று துணையும், உதவியும், ஆதாரமுமானவை என்று தானே நீங்கள் பதில் சொல்லுவீர்கள். அதுவல்ல உண்மை என்பது இப்போது வெளியாகியிருக்கிறது. மக்களிடம் வரி வசூல் செயவதற்காக ஏற்படுத்தப்பட்ட "ஏஜண்டுகளே" இவ்விருசாராரும் என்பது நடைமுறை உண்மையாகி வருகிறது. "உரலுக்கு ஒருபுறம் இடி, மத்தளத்திற்கு இரண்டுபுறமும் இடி" என்பார்கள். மக்களும் மத்தளமாகி விட்டார்கள்' ஒரு புறத்தில் மாநில அரசினரும், மறுபுறத்தில் மத்திய அரசினரும் வரி வரி எனப் புதிய இடிகளைத் தொடர்ந்து கொடுத்து வருவதால்!

மத்திய அரசின் சார்பில் நிதியமைச்சர் மேன்மை தங்கிய டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் பதவியை ஏற்றதும் ஏற்காததுமான சமயத்தில் புதிய பல வரிகளை அறிவித்திருக்கிறார். 'பட்ஜெட்டில்' பற்றாக்குறை விழுகிறதாம்: பல கோடி ரூபாய் தேவையாம்; இதற்காக வாழ்வின் இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை தொட்டு எல்லாப் பொருள்கள் மீதும் கண்டபடி வரிச்சுமை ஏற்றப்பட்டிருக்கிறது. தேர்தல் நெருங்கி வரும் இச் சமயத்தில் புதிய வரிகளை ஏற்றி இருப்பதைப் பார்த்தால் "போனால் காங்கிரசுக் கட்சிக்குத்தானே நட்டம், எனக்கென்ன?" என்று திரு. டி. டி. கே. கேட்பதுபோல இருக்கிறது. பாராளுமன்றத்தில் இவ்வரிச்சுமையைக் கண்டித்துப் பல உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள். "சாபம் கொடுத்தால் கொடுத்ததுதான்" என்று கர்ச்சித்த பழங்கால முனிவர்களைப்போல, "வரி போட்டது போட்டதுதான்" என்று அரசினர் அறிவித்துவிட்டனர்.

சென்னை அரசினர் ஓரளவு நாகரிகமாக நடந்துகொண்டுள்ளனர். என்ன இருந்தாலும் மேன்மை தங்கிய சி. சுப்பிரமணியம் ஒரு சிறந்த காங்கிரசுக்காரர் அல்லவா? அடுத்த ஆண்டுக்குரிய இடைக்கால 'பட்ஜெட்டில்' கூட அவர் புதிய வரிகளைப் புகுத்தவில்லை. அதுமட்டுமா? தாம் தயாரித்த புதிய "பட்ஜெட்டை" தாமே வாய் திறந்து எந்த உறுப்பினரின் வலியுறுத்தலுக்காகவும் அல்ல, தாமே விரும்பி தமிழிலே உரையாற்றினார்! இந்தச் சமயத்தில் 'தமிழ் வாழ்க!' என்று சொல்வதைவிடத் "தேர்தல் வாழ்க" என்று பாராட்டத் தோன்றுகிறது நமக்கு! மேலும் திரு. சி. சுப்பிரமணியம் புதிய வரிகளைப் போடவில்லை, மிகவும் நல்லவர் என்று பாராட்டத்தோன்றுகிறதல்லவா? அதுவும் ஒருவேடிக்கை. இப் புதிய "பட்ஜெட்டில்" 5-கோடிக்குமேல் துண்டுவிழுகிறது. அவற்றிற்குப் புதிய வரிகள் போட்டுத்தான் ஆகவேண்டும். நமது நிதியமைச்சர் "நாம் ஏன் புதியவரிகளைப் போட்டுத் தேர்தல் சமயத்தில் கெட்ட பெயர் எடுக்கவேண்டும்; தேர்தல் முடிந்த பிறகு வரும் முதல் நிதியமைச்சர், வேலையேற்றவுடன் புதிய வரிகளைப் போட்டுக் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ளட்டுமே" என்று சாதுரியமாக விட்டுவிட்டரர் போலும்! வரிபோடுவதில் சாதுரியம் என்ன, என்கிறீர்களா? அடிபோடுவ்திலும் அழகாகப் போடுவதில்லையா? மக்கள் அனுபவிக்கும் பயன் இதுதான்."

★

காஞ்சீபுரம்
30—12—'56

## தம்பி !

புதுடில்லியிலிருந்து கிளம்பி வந்த மொரார்ஜி தேசாய், பூவிருந்தவல்லியிலே, காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைத்தார்—ஞாயிறன்று!

இந்தத் திருநாளுக்குத் துணைநின்றனர்; ஒ. வி. அழகேசன், போன்றோர். உள்ளூர் அமைச்சர்கள் உற்சவத்திலே கலந்துகொண்டனர். ஒரே ஒரு குறைதான்; மக்களுக்கு உற்சாகம் எழவில்லை!!

முதல் காரணம், முதன் முதலாக இவர்கள் அழைத்துவந்தது, யாரை, கவனித்தாயா? மலடியைக்கொண்டு, பிள்ளைப் பேறின் சுகவழி பற்றிய போதனை பெறுவதுபோல, மங்கலநாண் இழந்தவளைக்கொண்டு, கட்டுக் கழுத்தினளுக்கு மங்கள ஸ்நானம் செய்விப்பது என்பார்களே, அதுபோல, பம்பாய் மாநிலத்தில், மக்களின் சீற்றத்தால் தாக்கப்பட்டு, மேற்கொண்டு அங்கே முதலமைச்சராக இருக்கமுடியாத நிலைபெற்று, நேரு பண்டிதருடைய தயவினாலே, டில்லியில் வேலைதேடிக்கொண்டு ஓடிப்போன மொரார்ஜி தேசாயை, அழைத்துவந்தார்கள்!

பாபம், அவர், ஆமதாபாத்தில் பட்ட அல்லலையும், பம்பாயில் பதறியதையும், மக்கள் பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறார்கள்.

பேச வந்தார் இந்தப் பெரியவர்; ஆமதாபாத்திலே, ஆத்திரமிகுந்த மக்கள், இவர் எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும், மக்களுக்குத் துரோகம் செய்துவிட்ட மகானுபாவரே! போதும் உமது பேச்சு! நிறுத்திக்கொள்ளும்! என்று பெருங் கூச்சலிட்டு, இவரைப் பேச விடாமலே தடுத்துவிட்டனர். பெரிய கலகம் நேரிட்டது. பல நாள் பட்டினி கிடந்து, பரிதாபத்தை ஊட்டிப்பார்த்தார்; பிறகாவது பேசவிடுவார்கள் என்று, அப்போதும் மக்கள், நீ என்ன மாயா ஜாலம், மகேந்திர ஜாலம் செய்தாலும், அதற்கெல்லாம் மயங்கப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர். பேச, மேடை ஏறினார், கலகம்தான் மீண்டும்!

எந்த மாகாணத்தில் இவர் தேசிய விடுதலைப் போராட்டக் காலத்திலே, வீரர் என்றும் தீரர் என்றும் தியாகி என்றும் கர்மயோகி என்றும் புகழ்ந்துரைக்கப் பட்டாரோ, அங்கு இவருடைய பேச்சு, செல்லாக்காசு ஆகிவிட்டது—இவர் வருகிறார் பூவிருந்தவல்லிக்கு!!

பாரததேசம் என்பது ஒன்று—இதிலே வடக்கு என்றும், தெற்கு என்றும், மத்திய சர்க்கார் என்றும், மாநில சர்க்கார் என்றும், இந்த மொழி என்றும், அந்த மொழி என்றும் பேசிப் பிளவு உண்டாக்கக் கூடாது என்று மொரார்ஜி 'தேசிய மாமந்திரம்' உபதேசித்தார்; அவருடைய மாகாணத்திலே, அவரை இந்த உபதேசத் தைப் பேசக்கூட விடவில்லை; விரட்டி அடித்தனர், வீறுகொண்ட மக்கள்! அங்கு

# ஓட்டுச்சாவடி போகுமுன்பு...

அல்லற்பட்டவரை அழைத்து வந்து இங்கு விழா நடத்திக்காட்டினார் அமைச்சர் பக்தவத்சலம்!! பரிதாபம்! ஆரம்பமே அழுதுவடிவதாக அமைந்தது பற்றி அவருடைய 'ஆப்த' நண்பர்களேகூட ஆயாசப்பட்டுக்கொண்டார்களாம்!!

முதலமைச்சருடன் சேர்ந்து மொத்தம் நான்கு மந்திரிகள், தம்பி! டில்லி மந்திரி ஒருவர்—அவர்தான் மொரார்ஜி—குட்டி மந்திரி ஒருவர்—அரியலூர் அழகேசன் அவர்கள்!

எல்லோருமே அன்று வெளுத்து வாங்கி விட்டார்களாம் போயேன், நமது கழகத்தை.

"கூட்டம் கூடும் அவர்களுக்கு—கும்பகோணம் மாமாங்கத்துக்குக் கூடத்தான் கூடுகிறது"—என்றாராம், ஒரு மேதை!! இவர்களுக்குக் கூட்டம் வராததாலே, இந்தப் பேச்சுப் பேசுகிறார்கள், வெட்கமின்றி; பிறருக்குப் பெரிய கூட்டம் கூடினால், 'மாமாங்கக் கூட்டம்' என்று கேலி பேசுகிறார்களே, இவர்களுடைய நேரு வருகிற போது, கூடும் கூட்டமும், மாமாங்கந்தானா? அப்போது பார், வாயை! ஜன சமுத்திரம்! மக்கள் வெள்ளம்! இலட்சோப இலட்சம்! என்றெல்லாம் அப்போது பெருமை அடித்துக் கொள்கிறார்களே!! — என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் பேசிக்கொண்டதாகக் கேள்விப்பட்டேன்.

நொந்த உள்ளம் கொண்டோர் தம்பி! பேசுவது, வேகாததைத் தின்றுவிட்டு வேதனைப்படுபவர் எடுத்திடும் 'வாந்தி'போலத்தான்—நாற்றமும் குழப்பமும் அவ்வளவு இருக்கும். எனவேதான், "கூட்டம் கூடுகிறதாம் கூட்டம்! என்ன கூட்டம்! மகாமகத்துக்குக்கூடத்தான் கூடுகிறது" என்று பேசினர். போகட்டும், எப்படியோ ஒன்று நம்மை நிந்திப்பதால், நொந்து கிடக்கும் அவர்கள் உள்ளத்துக்குச் சிறிதளவு சாந்தி ஏற்பட்டிடுமே, நமக்கென்ன நஷ்டம்!

மொரார்ஜி, மாகாணப் பிரிவினை உணர்ச்சி—வடக்கு தெற்கு என்ற பேதம் கூடாது, என்று இங்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிறார்—அதேபோது பம்பாய் மாகாண முதலமைச்சர் சாவன், திணறித் திண்டாடிப் போகிறார். மொரார்ஜி இங்கு தந்த உபதேசம்போலவே சாவன் அங்கு உபதேசம் செய்யப் புறப்பட்டார். மராட்டிய மக்கள் இதற்கு இடந்தரவில்லை!

**சம்யுத்த மராட்டியம் வேண்டும்!**
**சாவன், திரும்பிப்போ!**

என்ற முழக்கம் இடியென்று கிளம்பிற்று!

இது சரியா?
இது முறையா?
இது தேசீயம் ஆகுமா?

என்றெல்லாம் சாவன், இறைஞ்சுகிறார்—மராட்டிய மக்களோ,

எமது உரிமையை இழக்க மாட்டோம்!

எமக்கு சம்யுத்த மராட்டியம் வேண்டும்!

என்று முழக்கமிட்டிருக்கிறார்கள்.

கருப்புக் கொடிகளைக் காட்டி, ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் கலந்துகொள்ளும் கூட்டமாதலால், போலீஸ் படை வரிசையும் ஏராளம், ஆட்சிக்குத் துதிபாடகர்களாக உள்ளோரும் நிரம்ப! எனினும், உரிமை முழக்கத்தின் முன்பு எந்தச் சக்தியும் நிமிர்ந்து நின்றிட முடியவில்லை! சாவன் பாடு, திண்டாட்டமாகி விட்டது! போற்றித் திரு அகவல் போதுமானதாகிவிடவில்லை!

இந்த 'பம்பாய்' மாநிலத்திலிருந்து வந்த மொரார்ஜிதான் பூவிருந்தவல்லியிலே 'ஒற்றுமை'—'தேசீயம்'என்பனபற்றித் திருப்பல்லாண்டு பாடி இருக்கிறார், — ஆங்கிலத்தில்; அதனை அவசரத் தமிழாக்கித் தந்திருக்கிறார், அமைச்சர் பக்தவத்சலனார்.

வடக்கே உள்ள மக்கள் ஏதோ, மாகாணப்பற்று, மொழிப்பற்று, ஏதுமற்று 'பாரதம்' என்ற பாசத்துக்கே கட்டுப்பட்டுப் போய்விட்டதுபோலவும், இங்கே மட்டுமே அதுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுத்தப்பட்டு இருப்பதுபோலவும் அதுவும் நாம் நடத்துகிற பிரசாரம், விஷமத்தனத்தையும்விபரீதத்தையும் இங்கு மூட்டிவிட்டதுபோலவும் அந்த நஞ்சுபோக மொரார்ஜி போன்றார் வந்து பேசுவதுபோலவும் ஒரு நாடகம் ஆடப்படுகிறது; தம்பி, உண்மை நிலைமையோ வேறு, அதனை நீயும் அறிவாய், நம் நாட்டிலுள்ள காங்கிரசாரும் அறிவர்.

எந்த மொழிக்காரரும், எந்த மாநிலக்காரரும், காங்கிரஸ் என்பதற்காகக் கட்டுப்பட்டு, தமது உரிமைகளை இழந்துவிடத் தயாரில் இல்லை! 'கண்கண்ட கடவுள்' என்றும் 'பார் புகழ் தலைவர்' என்றும் பிற நேரங்களிலே கொண்டாடும் நேரு பண்டிதராக இருப்பினும், மொழி உரிமை, மாநில உரிமை என்ற பிரச்சினைகள் எழும்போது, பண்டிதரையே பதறி ஓடச் செய்கிறார்கள். காந்தி படமானாலும் நேரு உருவச் சிலையானாலும், கதர்ச் சட்டையானாலும் குல்லாயானாலும், கொளுத்துகிறார்கள், உடைத்துத் தூளாக்குகிறார்கள். துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்ச மறுக்கிறார்கள்! இரத்தத்தைச் சந்தனக்குழம்பென எண்ணிக் கொள்ளுகிறார்கள்.

அமைச்சர்கள் அஞ்சி ஓடுகிறார்கள்! ஆமதாபாத்தில், அகில உலகப் புகழ்பெற்ற நேரு பண்டிதர், 90-நிமிடம் முயன்று பார்த்தார், கெஞ்சிப் பேசினார், கோபம் மிஞ்சிடப் பேசினார், கதை பேசிப்பார்த்தார், எதுவும் பலன் தரவில்லை!

எங்கள் உரிமை
எங்கள் குஜராத்!

என்றே எக்காளமிட்டனர்; குஜராத்திகள்!

வங்கமும் — பீகாரும் இணையும் என்று கூறினார், வங்க முதலமைச்சர் டாக்டர் ராய்! இஃதன்றோ தேசீயம் — இதுவன்றோ பாரதப் பண்பாடு என்று அங்கிருந்து மகிழ்ந்து வாழ்த்தினார் நேரு பண்டிதர், இங்கிருந்தபடியே ஆசிகூறினார் ஆச்சாரியார்! ஆனால், வங்க மக்கள் செய்தது என்ன?

கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பினர் — டாக்டர் ராய் மீது! அவர் 'தேசீய ஒற்றுமை' பேசித்தான் பார்த்தார்! "நான் தெரியவில்லையா? உங்கள் தலைவன்! வங்கத்துக்கு வாழ்வளிப்பவன்! உங்கள் சுகமே என் சுகம் என்று எண்ணிப் பணியாற்றும் ஊழியன்!" என்று ஏதேதோ பேசினார்! அவருடைய பேச்சுக்குப் பக்கபலமாகப் போலீசும் பட்டாளமும் நின்றது! எனினும் சிங்கக் குணம்படைத்த வங்க மக்கள், 'இணைப்பு' எமக்கு வேண்டாம் என்று தீர்ப்பளித்தனர்—டாக்டர்

(15-ம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் நாம்

16—12—56ல் வேலூரில் நடைபெற்ற தேர்தல் நிதிச் சிறப்புச் சொற்பொழிவின் போது சி. என். ஏ. ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட இருக்கும் பெரிய செலவு மிக விரைவில் உண்டாக இருப்பதால், தி. மு. க. உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் அன்பர்களும் பல்வேறு வகையில் நிதி திரட்டித் தரும் பணியில் ஈடுபடுகின்றார்கள். பெருஞ்செலவு ஏற்படும் என்று தெரிந்திருந்தால் நாங்கள் தேர்தலிலேயே ஈடுபடவேண்டாம் என்று சொல்லி இருப்போமே என்று இப்போது கைபிசைந்து கொள்வதிலே அர்த்தமில்லை. திருச்சி மாநாட்டில் வாக்கெடுப்பு எடுத்தபோது இதை எண்ணிப் பார்த்து இவ்வளவு பெரியதொகையைச் சேர்க்கும் ஆற்றல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ நாட்டு மக்களுக்கோ இல்லை என்ற ஐயப்பாடு, அச்சம் காரணமாக தேர்தலில் ஈடுபடவேண்டாம் என்று சொல்லி இருக்கலாம். ஆனால் பெருவாரியான மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடத்தான் வேண்டும் என்று வாக்களித்திருக்கிறார்கள். ஆகையால் பெரும் நிதி திரட்ட வேண்டிய பணியும் வெற்றிக்காகப் பாடுபடும் வேலையும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பொது மக்களுக்கும் ஏராளமாக இருக்கிறது. ஆகையினால்தான் நாங்கள் எந்த ஊர்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாயினும் அது தேர்தல் நிதிக்குப் பயன்படுமா என்று பார்த்துப் பார்த்துக் கேட்டு அவைகளில் கலந்து கொள்ளுகின்றோம்.

காலையிலே கட்டணம் போட்டு இங்கே நடத்துகின்ற இந்தக் கூட்டம் — உண்மையிலே எந்தக் கட்சிக்காரரும் கட்டணம் போட்டுக் கூட்டம் நடத்துவது இல்லை; கட்டணம் போடாத கூட்டத்திற்கே ஆட்கள் வருவதில்லை; வந்தால் கொஞ்சம் கட்டணம் கூடத் தருகிறோம் என்று அழைத்தாலும் மக்கள் வராமல் இருக்கிறபொழுது, கட்டணம் போடும் கூட்டங்களுக்கு மக்கள் கூடுகின்றார்கள் என்றால் உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்திருக்கின்ற வளர்ச்சிக்கு அது ஒரு அறிகுறியாகும். கட்டணம்போட்டுநடைபெறுகின்ற இதுபோன்ற கூட்டங்களில் கல்லூரிகளிலே தரப்படும் அறிவுரைகளைப் போல தரவேண்டும் என்று எனக்கு நீண்ட நாட்களாகவே ஆவல் உண்டு. ஆனாலும் தேர்தல் காலத்தில் எதுவும தேர்தலுக்காகப் பயன்படவேண்டும் என்று எண்ணுகின்ற காரணத்தினால் நானும் நண்பர் நடராசனைப் போல் தேர்தலைப்பற்றியே பேச வேண்டியவனாகிறேன்.

நண்பர் நடராசன் அவர்கள் வேலூரில், வேலூர்த் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் யார் நிறுத்தப்படுகின்றாரோ அவர் வெற்றி பெறப் பாடுபட வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார். வேலூரைப் பொறுத்தவரையில், நாம—திராவிட முன்னேற்றக் கழகத்தார் 150 இடங்களில் நிற்க இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிற இடங்களில், நாங்கள் நிச்சயம் வென்றே தீருவோம் என்று எண்ணியிருக்கிற இடங்களில் வேலூர் ஒன்று என்பதை உங்களிடத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வேலூரிலே உள்ள மக்களுக்கு மற்றத்தொகுதியிலே உள்ள மக்களைவிட அதிக பொறுப்புணர்ச்சி இருக்கிறது.

சில இடங்களில் நாம் போட்டியிட இருப்பது அந்தத் தொகுதியில் இருக்கிற காங்கிரஸ் சக்தியை அந்தத் தொகுதியிலேயே தேக்கி வைப்பதற்காகும்; சில தொகுதிகளிலே நாம் போட்டியிடுவது அந்தத் தொகுதியிலே இருக்கும் காங்கிரசார் வேறு தொகுதிக்கு வந்து அந்தத் தொகுதியில் இருப்பவர்களைத் தட்டிவிடாமல் இருப்பதற்கு, அவர்களை உசுப்பிவிடாமல் இருப்பதற்காகும்; இன்னும் சில தொகுதிகளில் நாம் போட்டியிடுவது அந்தத் தொகுதியிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர், தங்கள் வாக்குகளை வேறு பெட்டிகளில் போடக்கூடாது என்று அவர்கள் ஒதுங்கி இராமல் 'உனக்கு என்று ஒரு பெட்டி உண்டு, உன் வாக்குகளை அதிலே போடு' என்று அவர்களை அந்தப்பக்கம் அனுப்புவதற்கு; ஆனால் வேலூரிலே நாம் நிற்பது நிச்சயமாக வெற்றி பெறுவோம என்ற கருத்தோடுதான் நிற்கிறோம்.

ஆகவே வேலூரிலே உள்ள தோழர்கள், வேலூரைச் சார்ந்த தோழர்கள், இதற்குமுன் அவர்களிடையே இருந்தகட்டுப்பாட்டை விட அதிகமான கட்டுப்பாட்டுடன் திராவிட முன்னேற்றக் கழகம்

# காங்கிரசுக்குக் கள்ளமார்க்கட் கைலாகு!

நிறுத்தும் அபேட்சகர் வெற்றி பெறப் பாடுபட வேண்டும். தோழர் நடராசன் அவர்கள் மெத்தத் தைரியத்தோடும் உறுதியோடும் உங்களிடத்திலே பேசினார்; திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களிலே வெற்றிபெற இருக்கிறது; காங்கிரசின் பணபலம் நம்மை ஒன்றும் செய்துவிடாது என்று. நான் உங்களிடத்திலே அந்த வீணான தைரியம்தரப் பிரியப்படவில்லை.

போராட்டத்திற்குப் போவதற்கு முன்னாலே, இரண்டு கட்சிகளும், இரண்டு பக்கத்தில் உள்ளவர்களுக்கும் என்னென்ன வலிவு உள்ளதென்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்து, ஒப்பிட்டுப் பார்த்து அதற்குப் பிறகுதான் நீங்கள் உண்மையிலேயே போராட்டத்தினுடைய விளைவுகளைக் கணக்கெடுக்க வேண்டும். வள்ளுவர் அதனை மிக அழகாக வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றார். தன் வலிவும் மாற்றான் வலிவும் ஒப்ப நோக்கிப் பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு நாம் வரவேண்டும். அந்த வகையிலே நான் காங்கிரசுக்குள்ள வலிவைக் குறைவாக மதிப்பிடவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு இன்றைய தினம், இன்னமும் தாக்குப் பிடிக்கின்ற சக்தி இருக்கிறது; காங்கிரஸ் கட்சிக்கு இன்றைய தினம் சர்க்காரின் பலம் இருக்கின்றது; காங்கிரஸ் கட்சிக்கு இன்றைய தினம் பத்திரிகைகளின் பலம் இருக்கிறது, பயந்த பணக்காரர்கள் காங்கிரஸ்கட்சிக்கு ஆதரவு அளிக்கிறார்கள்; கள்ள மார்க்கட்காரர்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கைலாகு கொடுக்கிறார்கள்; காங்கிரசை எதிர்த்து யாராலேயும் நிற்கமுடியாது என்கிற கிலி பழைய காலத்திலே இருந்து வந்தவர்களுக்கும், நீண்ட நாட்களாக அரசியலில் இருந்துவந்தவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு ஒரு ஒப்புயர்வற்ற தலைவர், உலகப் புகழ்பெற்ற தலைவர், எல்லா நாடுகளிலும் ஏற்றம் பெற்றிருக்கின்ற தலைவர் பண்டித ஜவகர்லால் நேரு அந்தக் கட்சிக்குத் தலைவராகக் கிடைத்திருக்கின்றார்.

நான் அந்தக் கட்சியைப் பற்றியும் அதற்கு இருக்கும் செல்வாக்கைப் பற்றியும் இந்த அளவுக்குச் சொன்னதற்குக் காரணம், நம்முடைய எதிரி எவ்வளவு வலிவோடு இருக்கிறான் என்பதை நாம் நன்றாக உணர்ந்தால்தான், அந்த அளவுக்கு நாம் வளர்ந்தாகவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி நமக்கு இருக்கும். வருகிற பயில்வான் காமா பயில்வானதான் என்பது தெரிந்தால்தான் நாமும் ஒரு பத்து கசரத்துப் போட்டுவிட்டுப் பயில்வானிடத்தில் போவோம். வருகிற பயில்வான் புல் தடுக்கினால் கீழே விழுவான் என்று நாமாகக் கருதிக்கொண்டுபோனால், நாம் நடக்கிற நடையிலேயே கீழே விழுந்துவிடுவோம். ஆகையினால்தான் எதிரியைப் பறறிக் குறைவாக மதிப்பிடவேண்டாம் என்று உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தேர்தல் காலத்திலே காங்கிரஸ்காரருக்குப் புதிதான வலிவு கிடைக்கும். தேர்தலுக்கு முன்னால் வரை கதரைத் தொட்டிருக்க மாட்டார்கள்; கைராட்டினத்தைப் பார்த்திருக்கமாட்டார்கள், காந்தி படத்தைக் கும்பிட்டிருக்கமாட்டார்கள், காங்கிரஸ் கூட்டங்களுக்குப் போயிருக்கமாட்டார்கள். ஆனால் தேர்தல் நெருங்க நெருங்க ஒரு ஊரில் தேர்தலில் அபேட்சகராக நிற்கவேண்டும் என்று கருதும் ஒருவர் திடீரென்று கதர்க்கடைக்குப் போவார்; 10 கெஜமோ 12 கெஜமோ கதர்த் துணி வாங்கி சட்டை தைத்து போட்டுக்கொண்டு கடை வீதியிலே உலாவுவார். நான் யாருடைய பெயரையாவது சொன்னால் யாரோ ஒரு நிஜமான புருஷரைச் சொல்லுகின்றேன் என்று நீங்கள் கருதவேண்டாம். உதாரணத்திற்குச் சிலவற்றை நான் சொல்லுவேன். ஒரு ஊரிலே யாராவது ஒருவர்—சீதாபதி என்று வைத்துக் கொள்ளுங்கள் — புதிதாகக் கதர் சட்டை தைத்துப் போட்டுக்கொண்டு கடை வீதியிலே போகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், கடை வீதியிலே அவரைப் பார்க்கிற ஒரு தோழர் “என்னய்யா இதற்கு முனனாலே இல்லாமல் இப்போது கதர்ச்சட்டை போட்டிருக்கிறீரே முன்பெல்லாம் அழகான சில்க் சட்டைகளும் அற்புதமான டசூர் சூட்டுகளும், நல்ல பின்னி சூட்டுகளும் போட்டுக்கொண்டு வருவீர்களே, இன்றைய தினம் கதர் போட்டுக்கொண்டு வருகின்றீர்களே?” என்று கேட்டால் அவர் சிரித்துக்கொண்டே, “தேர்தல் வருகிறதல்லவா, என்னை M. P.க்கு நிற்கச்சொல்லியிருக்கிறார்கள், அதனால் இந்தச் சனியனை மாட்டிக்கொண்டேன்” என்று அவர் சொல்வதை நீங்கள் கேட்கலாம். சனியன் என்று அவரே கருதினாலும், அதையெல்லாம் மாட்டிக்கொண்டாவது அந்தக் காங்கிரசில் நிற்கவேண்டும் என்ற அளவில் காங்கிரசுக்குப் புதிய புதிய பலம் தேர்தல் காலத்திலே வந்து சேரும்.

அதைப் போலவே புதிய புதிய எதிர்ப்புகள் நமக்குத் தேர்தல் காலத்திலே வந்து சேரும். சாதாரணமாக, உதாரணத்திற்கு நான் சொல்லுவேன், ஏதாவது ஒரு ஊரில், விருதம்பட்டி என்று வைத்துக் கொள்ளுங்கள், விருதம்பட்டிக்குத் தோழர் நடராசனை அழைத்திருப்பார்கள் ஒரு கூட்டத்திற்கு, விருதம்பட்டி கூட்டத்திற்கு அவர் வருவதாகச் சொல்லி போகாமல் இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள், 6 மாதத்திற்கு முன்னாலே; அதையெல்லாம் அப்போது மறந்து விட்டிருப்பார்கள்; மறு கூட்டம் போட்டுக் கொள்ளலாம் என்றுகூட இருப்பார்கள், ஆனால் தேர்தல் வருகிறது என்று தெரிந்தவுடன் நடராசன் விருதம்பட்டிக்குப் போய் அங்கே இருப்பவர்களைப் பார்த்து “நீங்களெல்லாம் கழகத்திற்குவேலை செய்யவேண்டும், தேர்தலிலே வெற்றிபெறச் செய்யவேண்டும், என்று கேட்டுக்கொண்டால், விருதம்பட்டித் தோழர்கள் அவரைத் திரும்பிப்பார்த்துச் சொல்லுவார்கள், “நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்லுகின்ற பேச்சு, 6 மாதங்களுக்கு முன்னாலே கூட்டத்திற்கு அழைத்தேன், ஆறு கடிதங்கள் போட்டேன் ஒன்றுக்குக்கூடப் பதில் இல்லை. வருவதாகச் சொன்னீர்கள், நோட்டீசுகள் போட்டோம், வால்போஸ்டர்கள் ஒட்டினோம் கடைசி நேரத்திலே வராமல்போய் விட்டீர்கள், நாங்கள் வேலை செய்யமாட்டோம், என்று சொல்லிப் புதிதான விரோதத்தைத் தேர்தல் காலத்திலே கிளப்பிவிடுவார்கள்.

நான், இரண்டையும் ஒப்பிட்டுப்

# ஆற்றல் அனைத்தும் அன்புடன் தாரீர்!

பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். தேர்தல் காலத்திலே காங்கிரசுக்குப் புதிய வலிவு கிடைக்கும். தேர்தல் காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் புதிதாக எதிர்ப்புகள் கிடைக்கும். எப்பொழுதும் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கும் பலத்தோடு மிக அதிகமான புதுப்பலம் அவர்களுக்குச் சேரக் கூடும். உண்மையிலேயே பொது மக்களை கட்டணம் கொடுத்துவரச்சொல்லி 1000 ரூபாய் நிதி திரட்டி நாம் இந்தக் கூட்டத்தை நடத்துகின்றோம். தேர்தலிலே இதைச் செலவிடப் போகிறோம். ஆனால் காங்கிரசிலே ஒரு அபேட்சகர் நின்று, அவர் செலவுக்காக நிதிதிரட்டவேண்டும் என்று காமராசர் இதே வேலூருக்கு வருகிறார் என்றால், இங்கே 4-அணாவும் 8-அணாவும் கொடுத்து நடக்கின்ற கட்டணக் கூட்டத்திற்கு வரமாட்டார். காலையிலே 10-மணியிலே இருந்து 1-மணி வரை நீங்கள் ஏதாவது சினிமா கொட்டகையிலே பேசவேண்டும் என்று அழைத்தால் அதற்கு அவர் ஆகட்டும் என்று வரமாட்டார். அவர் செய்யக் கூடிய காரியம் எல்லாம், 'ஊரிலேயே எங்கே பெரிய பங்களா இருக்கிறது? என்று கேட்பார், அல்லது 'டிராவலர்ஸ் பங்களாவில் ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொல்லுவார். காமராசர் அங்கே வந்து இறங்கிவிட்டார் என்ற சேதி தெரிந்ததும், எப்படி எங்காவது பிணம் விழுந்ததும், கழுகுகள் தூரத்தில் இருந்தாலும் வட்டமிட்டுப் பிணம் இருக்கும் இடத்திற்கு வருமோ, அதைப்போல காமராசர் எங்காவதுவந்து இறங்கி இருக்கிறார் என்று தெரிந்த உடன் மெருகு குலையாத மோட்டார்கள் 10, 15, அந்தத் திக்கு நோக்கித் தானாகப் புறப்படும். அண்ணாத்துரை என்ன இவ்வளவு கேவலமாகக் காமராசரைப் பிணத்திற்கும், மற்றவர்களைக் கழுகுக்கும் ஒப்பிடுகின்றாரே என்று நீங்கள் சொல்லவேண்டாம். நான் உதாரணத்திற்கு மட்டும்தான் அதைக் சொன்னேன்; காமராசருக்குக் கழுகுப் பார்வை இருக்கலாம்; ஆனால் பிணக்கோலம் அவருக்கு இல்லை.

அவர் அங்கு தங்கி இருந்த உடன் மெருகு குலையாத மோட்டாரிலே வந்த சீமான்கள், மிட்டாதார்கள், வெளியிலே இருக்கிற பணியாளைப் பார்த்து உள்ளே ஐயா இருக்கிறாரா என்று கேட்பார்கள். இன்னும் சிலபேர் ரொம்பப் பந்தத்தோடும் பாசத்தோடும், 'நாடாரவர்கள் இருக்கிறாரா' என்று கேட்பார்கள், அதற்கு முன்னாலே நாடாரைப்பற்றி இவரே கூடக் கேவலமாகப் பேசி இருப்பார். அதற்கு முன்னாலே காமராசரைப் பற்றிக்கூட இவர் கண்டபடி ஏசி இருக்கக்கூடும், என்றாலும் காமராசர் முதல் மந்திரி ஆகிவிட்டார் என்று தெரிந்தவுடன், அவர் தேர்தலுக்கு ஆட்களைப் பொறுக்க வந்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்ட உடன் மெருகு குலையாத மோட்டாரிலே ஏறிவருகிற சீமான்கள், 'நாடார் இருக்கிறாரா' என்று கேட்டு, 'இருக்கிறார்' என்று வெளியே இருப்பவர் அறிவித்த உடன் மெள்ள உள்ளே நுழைந்து, அதிக ஜனநெருக்கடி உள்ள கோயிலுக்குள் சென்றவன், மூல விக்ரகம் கண்ணுக்குத் தெரியாவிட்டால், பக்தர்களை இந்தக்கையினாலும் அந்தக் கையினாலும் விலக்கிப் பார்த்து, 'அம்பாளுடைய அழகுதான் என்ன? அம்பாள் கழுத்திலே இருக்கிற மாங்காய் மாலையினுடைய அழகுதான் என்ன? காதிலே இருக்கிறவைர ஓலை 6000-தாளும்போல் இருக்கிறதே, நம்முடைய வீட்டிலே இருப்பது 2000-தானே தாளும், என்று தன்னுடைய நகைக்கும் கோயில் நகைக்கும் கணக்குப் பார்க்கின்ற பக்தர்களைப்போல், வந்தவர்களை எல்லாம் விலக்கிவிட்டுக் காமராசரைப் பார்த்து, 'இவர் தானே காமராசர்?' "ஆமாம் இவர் தான் காமராசர்" "நல்ல கம்பீரமாக இருக்கிறார்" "கம்பீரமாக இருக்கிறார்" முன்னாலே எல்லாம் கொஞ்சம் ஒல்லியாக இருந்தார்; "ஆமாம் மந்திரியாக வருவதற்கு முன்னாலே" "இப்போது ஒரு சுற்று நன்றாக வளர்ந்திருக்கின்றார்" "ஆமாம் அப்படித்தான் வளர்ந்திருக்கின்றார்" "அவருக்கென்ன இலட்சுமி கடாட்சம் இருக்கிறது; முகத்திலே பாருங்கள் சரசுவதி கடாட்சம் இருக்கிறது" என்று பக்கத்திலே ஒருவர் சொல்லுவார். பக்கத்திலே இன்னொரு காங்கிரஸ் தோழர் தொடையைக் கிள்ளி, 'இலட்சுமி கடாட்சம் இருக்கிறது என்று சொல்லு; அது உண்மை, சரசுவதி கடாட்சம் என்று சொல்லாதே, அது அவருக்கு அவ்வளவாகக் கிடையாது" என்று அவர் சொல்லுவார். இவ்வளவுக்கும் பிறகு அருகில் அவரை உட்கார வைத்த உடன், காமராசர் அவரைப் பார்த்துக் கேட்பார்:—நீங்கள் காமராசரைப் பலபேர் நேரடியாகச் சந்தித்துப் பேசி இருக்க மாட்டீர்கள், நான் நேரடியாகச் சந்தித்துப் பேசி இருக்கிறேன்—காமராசரிடத்தில் இருக்கும் பழக்கம் யாராவது தன்னிடம் பேசவருகிறார் என்றால், யார் வருகிறாரோ அவருடைய முகத்தைப் பார்க்க மாட்டார். அவருடைய முகத்தைப் பார்ப்பதுபோல்தான் இருக்கும்! வேறு எந்தப் பக்கத்தையோ பார்த்துக்கொண்டுதான் பேசுவார். இவராகத்தான் திரும்பித் திரும்பி அவருடைய முகத்தைப்பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்துக் கொண்டே உள்ளூரிலே இருக்கிற பெரிய மனிதர் வேலூரைப்பற்றிச் சொல்லுவார்.

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு

தங்கள் சந்தா முடியும் தேதி தங்கள் முகவரியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. முடிவடையும் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, அன்பு கூர்ந்து தொகையை அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளக் கோருகிறோம்.

சந்தா எண்ணைப் புதுப்பிக்கவும், முகவரியை மாற்றவும், கோருபவர்கள் அருள் கூர்ந்து தவறாது சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதக் கோருகிறோம்.

பொறுப்பாளர்.

# பதவி இல்லாதபோது பரதவித்தவர்கள்!

"வேலூர் எப்படி இருக்கிறது?" என்று காம்ராசர் கேட்பார்.

"அதென்னங்க எப்படி இருக்கிறது என்று கேட்கிறீர்கள். நீங்கள் நினைக்கிறபடி இருக்கிறது" என்று இவர் பூடகமாகச் சொல்லுவார்.

"ஐயா, நான் நினைக்கிறபடி இருக்கிறது என்பது இருக்கட்டும், எப்படி இருக்கிறது? யார் நிற்பார்கள்?" என்று கேட்டவுடன், இவர் நிற்கலாம், அவர் நிற்கலாம் என்று ஆட்களைச் சொல்லுவார்கள். "யாரை நிறுத்துவது என்பது இருக்கட்டும், தேர்தல் நிதிக்கு நமக்குப் பணம் தேவை" என்று சொன்னவுடன் ஆயிரத்திலே இருந்துதான் கிளம்புமே தவிர, ஒரு ரூபாய், 100-காலணா, 101-ஓரணா என்று இந்த வகையிலே அந்தத் தேர்தல் நிதி இருக்காது. எதற்காக நான் இதைச் சொல்லுகிறேன் என்றால், காங்கிரசில் இந்தத் தேர்தல் நிதி வெகு சுலபத்தில் மிகப் பெரிய அளவில் சேரக்கூடும். நானே காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே தேர்தல் நிதி எப்படித் திரட்டினார்கள் என்பதை அறிவேன். பதவி ஒரு மனிதனை எந்த அளவுக்கு வேலைசெய்யும் என்பதும் எனக்குத் தெரிந்திருக்கிறது. பதவி இல்லாத காலத்திலே இவர்கள் எவ்வளவு பரதவித்தார்கள் என்பதும் நமக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது. ஆகையினாலே காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் காலத்தில் பெரும் பணம் சேருவதற்கு வாய்ப்பிருக்கிறது.

இப்போது நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால், பணபலம் படைத்த ஒரு கட்சி, பத்திரிகை பலம் படைத்த ஒரு கட்சி, பணக்காரர்களாலே ஆதரிக்கப்படுகின்ற ஒரு கட்சி, பார்புகழுகின்ற பண்டிதருடைய ஆதீனத்திலே இருக்கிற ஒரு கட்சி, காங்கிரஸ் கட்சி. அதை எதிர்த்து நிற்கிற நாம், பணபலம் அற்றவர்கள், பத்திரிகை பலம் குறைந்தவர்கள், பண்டிதருடைய கோபத்திற்கு ஆளானவர்கள், காமராசராலேயே கசப்பு என்று கருதப்படுபவர்கள். இது மட்டுமல்லாமல், நம்முடைய மாபெரும் தலைவர் பெரியார் இராமசாமியாலும் இழித்துப் பேசப்படுகின்றவர்கள்.

நான் எந்த உண்மையையும் உங்களுடைய மனதிலே இருந்து மறைக்க விரும்பவில்லை. எதனையும் குறைத்து மதிப்பிடச் சொல்லவில்லை. இரண்டையும் நீங்கள் சரியாகவே கணக்கிட்டுப் பாருங்கள். இந்தப்பக்கத்திலே இருக்கிற காங்கிரஸ் கட்சியையும், நல்லவகையிலேயே கணக்கெடுங்கள். இன்னொரு பக்கத்திலே இருக்கிற நம்முடைய வலிவையும் நீங்கள் கணக்கெடுத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இந்த இரண்டும் ஒன்றோடொன்று போட்டி இடுகின்ற நேரத்தில் நீங்கள் எந்த அளவுக்கு எங்களுக்கு ஆதரவளித்தால் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க முடியும் என்பதை இந்தக் கூட்டத்திலே நீங்கள் தீர்மானித்துச் செல்ல வேண்டும்.

"அதற்கென்ன அண்ணாத்துரை சொல்லிவிட்டார் நிற்கவேண்டும் என்று, இன்னார் நிற்கிறார் வேலூரில்; நாங்கள் வேலை செய்கிறோம்" என்று ஒப்புக்குச்சொல்லிவிட்டால் போதாது; உள்ளன்போடு நீங்கள் இந்த விஷயத்திலே ஈடுபட்டாக வேண்டும். உங்களுக்கிருக்கிற முழு ஆற்றலையும் இதிலே பயன்படுத்தி ஆக வேண்டும்; உங்களுக்கிருக்கின்ற முழு சக்தியைத் திரட்டித்தந்தாக வேண்டும். உங்களிடத்திலே இருக்கின்ற, பணபலம், உங்களுக்கிருக்கின்ற ஆள் கட்டு, உங்களுக்கிருக்கின்ற செல்வாக்கு, மக்களை ஈர்த்து வருகின்ற காந்த சக்தி அத்தனையையும் நீங்கள் ஒன்றாகத் திரட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் காணிக்கையாகஒதுக்கினால்தான்காங்கிரஸ்கட்சியைச்சமாளிக்க முடியும்.

சுலபத்திலே, கண்களைத்திறந்து பார்த்தால் சிவபிரான் திரிபுரத்தை எரித்துவிட்டதைப்போல், திராவிட முன்னேற்றக் கழகம் நின்றுவிட்டால் வென்றுவிடும் என்று உங்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை. இந்த அளவுக்கு நாட்டிலே கஷ்டங்கள் இருக்கின்றன. இடையூறுகளும், இன்னல்களும் ஏராளமாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் தாண்டி முன்னேற முடியும் என்ற நம்பிக்கை மட்டும் நம்முடைய உள்ளத்திலே கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கைக்குக் காரணம், நீங்கள் அவ்வப்போது அளித்துக்கொண்டு வருகிற பேருதவி; நீங்கள் காட்டுகின்ற நல்ல உற்சாகம் அத்தனையையும் விட, என்னுடைய உள்ளத்திலே இந்த நம்பிக்கை இருப்பதற்குக் காரணம், நம்மைத் தவிர இந்தக் காரியத்தைச் செய்வதற்கு நாட்டிலே வேறு கட்சி இல்லை.

காங்கிரஸ் கட்சி பலமான கட்சிதான்; இல்லை என்பார் இல்லை. காங்கிரஸ் கட்சிக்கு அளவற்ற பணபலம், அதையும் நான் குறைத்து மதிப்பிடச் சொல்லவில்லை. பண்டித ஜவகர்லால் நேருவுக்குச் செல்வாக்கு இல்லை என்று பேசுகின்ற சிறுமதிபடைத்தவன் அல்ல நான்; பண்டித ஜவகர்லாலுக்கு மிக நல்ல செல்வாக்கு இருக்கிறது. ஆனால் பண்டித ஜவகர்லால் நேருவுக்கு இருக்கிற செல்வாக்கை எதிலே இருந்து தெரிந்துகொள்கின்றோம்? அவர் அமெரிக்காவுக்குப் போனால் அமோகமாக வரவேற்கப்படுகின்றார்சீனாவுக்குப்போனால்இராஜோபசாரம்நடத்துகின்றார்கள். இலண்டனுக்குப்போனால் இராணியாரே வரவேற்கின்றார். ஜெர்மனிக்குப் போனால் அங்கே இருக்கின்ற பெருந் தலைவர்கள் கைகுலுக்குகின்றார்கள். இரஷ்யாவுக்குப் போனால் குருஷேவும் புல்கானினும் போட்டி போட்டுக்கொண்டு அவருக்கு உபசாரம் செய்கின்றார்கள். இவைகளைப் பார்த்துப் பண்டித ஜவகர்லால் நேருவுக்குப் பெருஞ் செல்வாக்கும் மதிப்பும் இருக்கிறது என்று நாம் கணக்கெடுக்கின்றோம்.

இதே செல்வாக்கு யாராருக்கு இருக்கிறது என்பதை நீங்கள் பார்த்தால், போன வாரத்திலே இந்தியாவுக்கு வந்திருக்கின்ற பிரமுகர்களில் திபெத் நாட்டைச் சேர்ந்த இரண்டு லாமாக்கள் வந்திருக்கின்றார்கள். ஒருவருடைய பெயர் தலாய் லாமா; மற்றவருடைய பெயர் பஞ்சன் லாமா. இவர்களுக்கு இந்தியாவிலே எந்த அளவுக்கு வரவேற்பு என்றால், ஆகாய விமானத்தில் அவர்கள் இறங்கியநேரத்தில், பாலம் விமான நிலையத்தில் இராஜேந்திர பிரசாதும் பண்டித ஜவகர்லால் நேருவும்

# நேரு நம் நாட்டுக்காரரல்ல!

போட்டியிட்டுச் சென்றார்கள் வரவேற்க; வேதாந்தத்தை உணர்ந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் லாமாக்களை வரவேற்கப் போனார். ஆயிரக்கணக்கான மக்கள் விமான நிலையத்தில் அணிவகுத்து நின்றார்கள். டில்லியினுடைய இராஜ பவனத்திலேயும், இராஜவீதிகளிலேயும், ஏராளமான மக்கள் நின்றார்கள், அவர்களுக்கு உற்சாகமான ஊர்வலம் நடத்தினார்கள். சில பக்தர்கள் லாமாக்கள் நடந்துவந்து கொண்டிருந்த நேரத்தில் பாதையிலே அடியற்ற நெடுமரம் போல விழுந்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். லாமாக்கள் ஒரு உயர்ந்த பீடத்திலே அமர்ந்துகொண்டு, தங்கள் காலிலே வீழ்ந்து வணங்கியவர்களுக்குப் பட்டுத துணியைக் கொஞ்சம் கொஞ்சம் கிழித்து மந்திரம் செபித்து அந்தத் துணியை எல்லாம் கொடுத்தார்கள். அந்தக் கிழிந்த கந்தலை லாமாவினுடைய கைபட்டது என்ற காரணத்தாலே லாமாவினுடைய ஆசீர்வாதம் கிடைத்தது என்று நம்பி கண்களிலே ஒற்றிக்கொண்டு புனிதப் பொருளைப்போல பக்தர்கள் காப்பாற்றினார்கள். இதை நான் ஏன் சொல்லுகின்றேன் என்றால், தலாய் லாமாவுக்கும் பஞ்சன் லாமாவுக்கும் இந்தியாவிலே இந்த அளவுக்கு வரவேற்புக் கிடைத்தது. இதைத் திபெத் நாட்டுப் பத்திரிகையிலே படிக்கிறவர்கள், பஞ்சன் லாமாவுக்கும் தலாய் லாமாவுக்கும் இந்தியாவில் அமோகமான வரவேற்பு என்று பூரிப்பு அடையத்தான் செய்வார்கள. ஆனால் இந்த அளவுக்குவரவேற்புக்கொடுத்தார்களே தவிர, தலாய் லாமாவையும் பஞ்சன் லாமாவையும் வேலூரிலே உள்ள நீங்கள் ஏற்றுக்கொள்ள முடியுமா? காட்பாடியிலே உள்ள மக்கள் அவர்கள் காலிலே விழுந்து கும்பிட முடியுமா? இஸ்லாமியர்கள் 'அவரை எங்களுடைய குரு' என்று ஏற்றுக்கொள்ள முடியுமா? கிருஸ்தவர்கள் 'இவர்தான் எங்களுக்குக்கண்கண்ட கடவுள் என்று காட்டிக்கொள்ள முடியுமா? அல்லது இந்துக்களாவது லாமாக்களைப் பார்த்து இவர்களுக்கு இந்த அளவு வரவேற்பு இருக்கிறது; உற்சாகமிருக்கிறது மக்களிடத்தில்; ஆகையினால் இவர்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்று சொல்ல முடியுமா என்றால், அவர்களுடைய கதையை நீங்கள் பார்த்தால் யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

நான் உங்களை இப்போது எண்ணிப்பார்க்கச் சொல்வது, டில்லியிலும் கல்கத்தாவிலும் பம்பாயிலும் லக்னோவிலும், பிற இடங்களிலும் தலாய் லாமாவுக்கும் பஞ்சன் லாமாவுக்கும் இந்த அளவு செல்வாக்கு இருக்கிறதுஎன்ற காரணத்தினாலே நாம் அவர்களைக் கடவுள் என்று ஏற்றுக்கொள்வோமா? ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

போன மாதத்தில் அபிசீனிய மன்னர் வந்தார். அபிசீனிய மன்னருக்கு அமோகமான வரவேற்பு அளித்தார்கள். அபிசீனிய மன்னருக்கு அமோகமான வரவேற்பு அளித்த காரணத்தினாலேயே அபிசீனிய மன்னர், இந்த நாட்டுக்கு 'ராஜா'வாகட்டும். அல்லது இந்துமதக் குருவாகட்டும் என்று யாராவது ஏற்றுக்கொள்ளுவார்களாஎன்றால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்களை எல்லாம் கூட விட்டுவிடுங்கள். மக்கள் வெள்ளமே திரண்டுபோயிற்று குருஷேவுக்கும் புல்கானினுக்கும். குருஷேவுக்கும் புல்கானினுக்கும் இந்த அளவுக்குச் செல்வாக்கு இருக்கின்ற காரணத்தினாலே அவர்களே வந்து தலைவர்கள் ஆகட்டும் என்று யாராவது ஏற்றுக்கொள்ளுவார்களா? என்ன சொல்வார்கள் அவர்கள்? நேரு தான் இருக்கவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் போராடுவார்களே தவிர, செல்வாக்கு பெற்ற புல்கானின் வரட்டும் குருஷேவ் தலைமை வகிக்கட்டும் என்று எந்தக் காங்கிரஸ்காரனும் சொல்ல மாட்டான்.

ஏன் நான் இதைச் சொல்லுகிறேன் என்றால் அந்தந்த நாட்டுக்குள்ள தலைவர்களை அந்தந்த நாட்டுக்காரர் போற்றத்தான் செய்வார்கள். அந்த வகையிலே பார்த்தால், அண்ணாதுரை, பண்டித நேரு நம்முடைய நாட்டுக்காரரல்லவா என்று நீங்கள் கேட்கலாம். அதிலேதான் நமக்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது! பண்டித நேரு அவர்கள் செல்வாக்குப் பெற்றவரா? என்று என்னைக் கேட்டால், 'ஆம்' என்கிறேன் நான். 'அறிவாளியா?' என்று கேட்டால், நிச்சயமென்கிறேன் நான். 'ஆற்றல் உள்ளவரா'? என்று கேட்டால், 'நிரம்ப ஆற்றல் படைத்தவர்' என்கிறேன் நான். 'பார் முழுவதும் செல்வாக்கு இருக்கிறதா?' என்று கேட்டால், 'கட்டாயம் இருக்கிறது' என்கிறேன் நான். "ஆனால் அவர் நம்முடைய நாட்டுக்காரரா? என்று கேட்டால், 'இல்லை' என்று திட்டவட்டமாக நான் சொல்லுகின்றேன். இது ஒன்றுதான் எனக்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம்.

மற்ற அரசியல் கட்சிகள் 'நேருவுக்கு அறிவுச் சூனியம்' என்று பேசுகிறார்கள். நான் அப்படிப் பேசுபவன் அல்ல. மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் நேருவுக்குச் செல்வாக்கே கிடையாது என்கிறார்கள். நான் அப்படிக்குறைவாகமதிப்பிடுபவன் அல்லமற்றக்கட்சிக்காரர்கள் நேரு நல்லவர் என்று சொல்லுகிறார்கள். அதையும் நான்குறை சொல்லவில்லை.

ஆனால் மற்றக் கட்சிக்காரர்கள் நேரு நம்மவர் என்கிறார்கள். நான் நேரு நம்மவர் அல்ல என்கிறேன்.

தலாய்லாமா நமக்கு எப்படியோ, புல்கானின் நமக்கு எப்படியோ, குருஷேவ் நமக்கு எப்படியோ, அபிசீனிய மன்னர் நமக்கு எப்படியோ, எலிசபெத்இராணியார் நமக்கு எப்படியோ, ஐசனஹோவர் நமக்கு எப்படியோ அப்படி வரவேற்கத்தக்க விருந்தாளி நேரு என்றால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். ஆனால் அவர் நம்மை எல்லாம் ஆட்டிப் படைக்கத்தக்கவர், நம்மை எல்லாம் ஆளத்தக்கவர், என்று சொன்னால் அதிலே பயன் இல்லை,

பக்கத்துவீட்டு மாமரம் இனிப்பான பழங்கொடுக்கிற காரணத்

## பட்டம் வழங்கினர்

திருச்சி தேவர் ஆலில் டிசம்பர் 17-ஆம் தேதி, அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை தலைமையில் தோழர் கி.ஆ.பெ.விஸ்வநாதத்திற்கு 'முத்தமிழ்க் காவலர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

# உண்மையாகவே பந்தபாசம் இருந்தால்!

தாலேயே, அது நம்முடைய வீட்டு மாமரம் என்றால், அவர்கள் கூடச் சண்டைக்கு வருவார்கள். நம்முடைய வீட்டு மாமரத்துடைய மாங்காய் கொஞ்சம் புளிப்பாக இருக்கிறது அதிலே ஊறுகாய் போட்டுச் சாப்பிடுவதிலே இருக்கிற பெருமை பக்கத்துவீட்டு மாங்காயைக் கள்ளத்தனமாகப்பறித்து போடுகிற ஊறுகாயிலே இனிமையும் இருக்காது; மானமும்தக்காது.

அதைப்போல ஒரு நாட்டுக்குத் தலைவனை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமானால், யார்உயர்ந்த நிலையில் இருக்கின்றாரோ அவரை அழைத்துக்கொண்டு வந்து நான் தலைவராக்குகிறேன் என்று இருக்கிற அரசியல் குருட்டுத்தனம் இந்த நாட்டிலே மெத்தப் பரவி இருக்கிறது. ஆகையினால்தான் எங்கெந்த நேரத்திலே யார் யார் உயர்ந்திருக்கின்றார்களோ, எங்கெந்த நேரத்திலே யாருக்குச் செல்வாக்கு இருக்கின்றதோ, அவர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் 'எங்கள் தலைவர்' 'எங்கள் தலைவர்' என்று இந்த நாட்டிலே அரசியல் கட்சிகள் வரவேற்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் துணிந்து, ஆனால் தூய உள்ளத்தோடு, உறுதியாக அதே நேரத்திலே பிறரை இழிவாகக் கருதாமல் எடுத்துச் சொல்லுகிறது; அந்தந்த நாட்டுக்குத் தலைவர்கள் உண்டு; அதைப்போல இந்த நாட்டுக்குரிய தலைவர்களை நீங்கள் தேடுங்கள். நாங்கள் அந்தத் தகுதிக்கு ஏற்றவர்கள் அல்லாமல் இருக்கலாம். பெரியார் சொல்லுவதைப்போல 'இவர்கள் அதற்கு யோக்யதை அற்றவர்கள்' என்று அவர் சொல்லுவதிலே அர்த்தமிருக்கக்கூடும். ஆனால் அவருக்கு அந்த யோக்யதை உண்டல்லவா? அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளுவோம்; நேருவை அல்ல. அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளுவோம்; நேருவை நம்பி வாழுகிற காமராசரை அல்ல என்று நாமெல்லாம் இன்றைய தினம் முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த முதல் கட்டத்தில் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுவதெல்லாம், நேரு பண்டிதர் ஆற்றல் மிக்கவராக இருந்தாலும், நம்முடைய நாட்டுக்காரர் அல்ல. நம்முடைய நாட்டுக்காரராக இல்லாத காரணத்தினால்தான், சென்ற மாதத்தில் அரியலூரில் பயங்கரமான விபத்து ஏற்பட்டு சர்க்காருடைய கணக்குப்படி 150-பிணங்களைக் கண்டுபிடித்து எடுத்தார்கள்; சர்க்கார் தேடிப்பார்த்து இது ஆணா பெண்ணா என்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் இதற்குக் கை எங்கே கால் எங்கே என்று தேடிப்பார்த்து, வெட்டுப்பட்ட கையை உடலிலே ஒட்டிப் பார்த்து ஓ இது இதனுடைய கை அல்ல' என்று தூக்கிப்போட்டு, 'அவர்' 'இவர்' என்று சொல்லிக் கொண்டிருந்த உருவங்களை எல்லாம், 'அது' 'இது'என்றுசொல்லி, பள்ளம் வெட்டி அதிலே போட்டு, பெட்ரோலையும் ஊற்றிக்கொளுத்திவிட்டு 'எத்தனைபேர் செத்தார்கள்' என்று கேட்டால் 'நாலு குவியல் இருக்கும்' என்று கணக்குக் கொடுத்தார்கள். அப்படிப்பட்ட பயங்கர விபத்து அரியலூரிலே தோன்றிற்று.

பண்டித ஜவகர்லால் நேரு நம்மவராக இருந்திருப்பாரானால், நம்முடைய நாட்டுக்காரராக இருந்திருப்பாரானால், நம்முடைய நாட்டினுடைய உண்மையான தலைவராக இருந்திருப்பாரானால் இங்கே வந்திருக்க வேண்டாமா? அரியலூர் விபத்தைக் கேள்விப்பட்டவுடன் டெல்லி பாராளு மன்றத்தில் இங்கே இருந்துபோன என் நண்பர் முத்துச்சாமிவல்லத்தரசுதான் குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதார் என்று பத்திரிகைகளிலே நாம் பார்த்தோம்.

பண்டித நேருவுக்கு வந்த கவலை அத்தனையும், என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் ம. பொ. சிவஞானம் பத்திரிகையில் எழுதி இருப்பதைப்போல், தம்முடைய உயிர்த் தோழர், தம்முடைய உற்ற நண்பர், லால்பகதூர் சாஸ்திரி ராஜினாமா செய்து விட்டாரே என்ற அந்தக் கவலையைத் தெரிவித்தாரே தவிர, உண்மையிலேயே அவர் இந்த நாட்டுக்காரர் ஆனால், இந்த நாட்டுக்கு உடையவர் ஆனால், நம்முடைய இனத்தவர் ஆனால், நம்முடைய இரத்தமும் அவருடைய இரத்தமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையது என்று சொல்லிக் கொள்ளத்தக்க வகையிலே நமக்கும் அவருக்கும் பந்தமும் பாசமும் இருக்குமானால், அரியலூர் விபத்தைக் காண்பதற்கு ஓடோடி வந்திருக்கமாட்டாரா என்று கேட்கிறேன்; காங்கிரஸ்காரர்களே, நண்பர்களே, தமிழர்களே, நல்லறிவு படைத்தவர்களே, நீங்கள் தயவு செய்து இந்த ஒரு கட்டத்தை எண்ணிப்பாருங்கள்.

பம்பாயிலேயும், வங்கத்திலேயும், பீகாரிலேயும், மற்றப் பல இடங்களிலும் விபத்துகள் நேரிடுகின்ற நேரத்திலே—அஸ்ஸாமிலே நேரிடுகின்ற நேரத்தில், இதே பண்டித ஜவகர்லால் நேருவுக்கு அங்கெல்லாம் போக வேண்டும் என்று அக்கரை இருக்கிறது. துடிதுடிக்கின்றார். இரயிலில் போனால் நேரமாகும் என்று ஆகாய விமானத்தில் ஏறிப் பறக்கின்றார். அஸ்ஸாமிலே நேரிட்ட வெள்ளத்தை நேரடியாகப்போய் பார்ப்பதற்கு, பாதைகள் உடைந்துவிட்டன; 'வரவேண்டாம்' என்று தந்தி கொடுக்கின்றார்கள், அஸ்ஸாமிலே உள்ள அதிகாரிகள். 'ஜீப் போகின்ற பாதைகள் உடைந்துவிட்டால் என்ன? ஆகாயவிமானத்திலே வருகிறேன்' என்கிறார்.

வெள்ளம் இன்றைய தினம் வருகிறது; மக்கள்கஷ்டப்படுகிறார்கள்; நாலுநாள் ஆவதற்குள் ஆகாய விமானத்தில் பறந்து சென்ற பண்டித ஜவகர்லால் நேரு, அஸ்ஸாம் பிரதேசம் முழுவதையும் சுற்றிப் பார்க்கிறார். தன்னுடைய ஆகாய விமானத்திலே இருந்து உணவுப் பொருள்களை மூட்டை கட்டிப் பாரசூட் மூலமாகக் கீழே போடச் சொல்லுகின்றார். பெரிய பெரிய மோட்டார் லாரிகளில் ஆயிரக் கணக்கான மூட்டைகள் கோதுமையை ஏற்றி அஸ்ஸாமுக்கு அனுப்பி வெள்ளத்திலே கஷ்டப்படுகிற மக்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று சொல்லுகின்றார். இதை நான் சொல்வதற்குக் காரணம், அவ்வளவு ஈர மனம் படைத்தவர்: அவ்வளவு இரக்க குணம் படைத்தவர். மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் இதயம் அவ்வளவு துடிக்கின்றது, மக்களுக்கு அவதி விளைகிறது என்றால், அவருக்கு—அந்த அளவு இரக்கம் படைத்தவருக்கு 150-பேர் இங்கே செத்தார்கள் என்றால் இரக்கம் வரவில்லை.

(தொடரும்)

# தயாபரர்கள் ஆட்சியில்!

தயங்கப்போவதில்லையாம், அத் தயாபரர்!

**ஒரு முறை, இரு முறையல்ல, எத்தனை முறை வேண்டுமானாலும் தயக்கம் சிறிதும் காட்டப்போவதில்லையாம்'!**

சாதிக் கொடுமையை ஒழித்திட சண்டமாருதம் எனக் கிளம்பிவிட்டாரோ, சமூக ஏற்றத் தாழ்வுகளை சம்மட்டிகொண்டு சரிப்படுத்தப் புறப்பட்டுவிட்டாரோ, என்றே ஐயமுற்றேம், 'மித்திரனுர்' வழங்கிய அச் சேதியின் தலைப்பைக் கண்டதும்.

சோப்புச்சீமான், சுந்தர வாழ்வன்றி வேறேதுமறியாச் செல்வர், நேரு பண்டிதரின் நேத்ரக் கிருபைக்குப் பாக்கியமான புதிய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், "தயங்கேன்! தயங்கேன்! எத்தனை முறை வேண்டுமானுலும் தயங்கேன்!" என்று அறிவித்தது, வேறெதற்குமல்ல, வரிபோட!!

**வரிபோட்டு வாங்கவே, தயங்கமாட்டாராம் அவர்! எத்தனை முறைவேண்டுமானுலும் வரி போடத் தயங்கப்போவதில்லையாம்!**

டில்லிப் பார்லிமெண்டிலே சென்ற கிழமை பேசியபோது, சிம்மம்போலக் கர்ச்சித்திருக்கிருர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு 200 கோடி தேவைப்படுகிறதாம்—அதைச் சரிக்கட்டவே, எத்தனை முறை வேண்டுமானுலும் வரிமேல் வரி போட்டு வசூலிக்கப்போகிருராம் — அப்படி வரிபோட்டு வசூலித்து ஐந்தாண்டுத்திட்டத்தை நிறைவேற்றப் போகிருராம்.

ஐந்தாண்டுத் திட்டத்துக்காக 6000-கோடி செலவு செய்யப்போகிரேம் என்கிருர்கள்—அதற்குப் பணம் அகில உலகப் பாங்கி தரவிருக்கிறது என்கின்றனர்—அதுமட்டும்போதாது நாமும் ஏதாவது பணம் சேமிக்க வேண்டும், அந்த வகையில் ஆண்டுக்கு 200-கோடியாவது தேடவேண்டும் என்கிருர்கள்.

அழகான பூங்கா, அங்கேபோய் விட்டால் நல்லமலர் கிடைக்கும், நல்லோடை உண்டு, தென்றல் சிலிர்க்கும்—ஆனுல், அங்கு செல்ல, ஒரு குன்றிருக்கிறது அதைத் தாண்டினுல்தான் முடியும் என்று கூறிடின், வாடியவன் பொருட்படுத்தமாட்டான் கஷ்ட நஷ்டங்களை! எழில் ரோஜா, பறிக்கும்போது முள் குத்தும் என்பதற்காக அதைப் பறிக்காமல்விடான் ரோஜாவுக்கு ஏங்கியவன்!! அதுபோல வாழ்வுபெறவேண்டும் என்று துடித்துக் கிடக்கும் நாட்டில் வளம் பெருக இப்படியெல்லாம் கிட்டிகட்டி, பால் தரும் பசுக்களைத் தேடி ஆன மட்டும் பால் எடுக்கட்டும்—ஆனுல், அப்படிக் கஷ்டப்பட்டுச் சேகரிக்கிற பணம், எங்கு போகும், எப்படிப் போகும், யார்மூலம் செலவாகும் என்று எண்ணும்போதுதான் அச்சமும் திகிலும் ஏற்படுகிறது, நமக்கு.

* * *

பணமில்லை! பணமில்லை!—என்பது டில்லியாரும் சரி, சென்னை அரசினரும் சரி, இன்று நேற்றல்ல, சுதந்திரம் முகிழ்த்த நாள் முதல், தொடர்ந்து பாடிக்கொண்டு வரும் முகாரியாகும். கோடி கோடியாக வெள்ளையன் வைத்துவிட்டுப்போன ஸ்டர்லிங் இருப்பும், ரிசர்வ் நிதியும் இருந்தும்கூட அன்று முதல் இல்லை, இல்லையென்றே கூறி வருகின்றனர். எது கேட்டாலும் இல்லை—எதற்கெடுத்தாலும் இல்லைதான். அதனுல், மக்களைக் கசக்கிப் பிழியப்போகிரேம் என்று கூறும் மதியமைச்சர்கள் ஆட்சியிலே, பணம் என்ன பாடுபடுகிறது, என்பதைப் பார்ப்போம்.

**26-கோடி ரூபாய் நஷ்டமாம்!**

ஒரு கோடி இரண்டு கோடியல்ல, இருபத்தாறு கோடி! சென்னை சர்க்கார் ஓராண்டுக்குச் செலவழிக்கும் பணத்தில் பாதித் தொகை — பறிபோயிருக்கிறதாம்! இன்ஷியூர்செய்து தபால் மூலம் விலையுயர்ந்த பொருள்களையும் பணத்தையும் அனுப்புகிரேமல்லவா. இவைகள் வழியில் காணமற் போய்விட்டால், தபால் இலாகா நஷ்டஈடு தரும். அவைகள் காணமற்போகக் காரணம், இலாகாவிலுள்ள ஊழல்தான்! இந்த ஊழலால் கடந்த ஆண்டில் 26-கோடி ரூபாய் நஷ்டஈடு தர நேர்ந்ததாம் டில்லி!

இந்த அலங்கோலம்பற்றி மித்திரனே குமுறுகிறது — கதிரார் கதறுகிருர் — தேசீய ஏடுகள் கண்டிக்கின்றன டில்லியை. இவ்வளவு பணம் நஷ்டஈடு கொடுத்தது மட்டுமல்ல, அத்துணைப் பொருள்களையும் அனுப்பியோர், எவ்வளவு துயரமும் தொல்லையும் அனுபவித்திருப்பர். வெள்ளையன் காலத்திலே மிகப் பெயர்பெற்ற இலாகாக்களில் ஒன்று தபால் தந்தி நிர்வாகம். இன்று அதன் ஊழலுக்காக வரிப்பணம் கரியாகிறது, அதுவும் கோடி கோடியாக.

*

ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியென்று பூரிப்போடு சொல்லப்பட்டு வருகிறது, சமுதாய நலத் திட்டம் அதைப்பற்றி இங்குள்ள அமைச்சர் பக்தவத்சலம் ஆகா ஊகூ என்று புகழ்கிருர்! மக்கள் எல்லாம் போற்றவேண்டும் என்றும் எதிர் பார்க்கிருர்கள் காங்கிரஸ் மந்திரிகள்! அந்தச் சமுதாயநல அபிவிருத்தித் திட்டத்தில் செலவிடப்பட்ட பணத்திற்கு எவ்வளவு தூரம் பலன் ஏற்பட்டது என்பது குறித்து டில்லிப் பார்லிமெண்டில் கேள்விகள் கேட்டனர். அதற்கு சமுதாயநலத் திட்ட மந்திரிடே என்பார் என்ன சொன்னுர் தெரியுமா? திட்டத்தில் ஓரளவு பணவிரயம் ஏற்பட்டிருக்கலாம். காலம் செல்லச் செல்ல அனுபவம் ஏற்படும்.

அமைச்சர் அறிவிக்கிருர் இவ்விதம். ஓரளவு, பணவிரயம் ஏற்பட்டிருக்கலாமாம்! "அது சரியப்பா, போய்த் தொலையட்டும். துரிதமான அபிவிருத்தியாவது உண்டா?" என்று கேட்டால் அமைச்சர் தெரிவிக்கிருர், ஜனநாயக யுகத்தில் அபிவிருத்தி வேகம் துரிதமாக இராது! காலம் செல்லச்செல்ல அனுபவம் ஏற்படும்—என்று.

ஜனநாயக யுகத்தில் துரிதமாக இராதாம்! விளக்கம் எப்படி பார்த்தீர்களா? ஜனநாயக முறையில் காரியங்களைச் சாதித்துவருவதாக ஐசனேவர்

மாளிகையில் அமர்ந்து கொண்டு அகில உலகுக்கும் பறை சாற்றுகிறார் பண்டித நேரு. அவரது அமைச்சரோ, ஜனநாயகயுகத்தில் அபிவிருத்திகள் துரிதமாக இராது என்கிறார். அதே சமயத்தில் பணவிரயமாவது இல்லாமலிருக்கிறதா என்றால் அதுவும் ஆகிறது. அபிவிருத்திதிட்டம் என்ற பெயரால் செலவு ஆகிவருதற்கும் பணவிரயம் ஆவதற்கும் வித்தியாசம் உண்டு. செலவும் ஆகிறது—திட்டமும் முன்னேற வில்லை.-இந்த இலட்சணத்தில் பணவிரயமும் ஏற்படுகிறதாம்!

*

வீண்வழிகளில் பணவிரயம் செய்வதில் மட்டுமே நிபுணர்கள் போலும் என்றெண்ணாதீர்கள் டில்லி சர்க்காரைப்பற்றி. சில சமயங்களில் ஒதுக்கிய பணத்தை எப்படிச் செலவு செய்வது என்பதுகூட அறியாது திகைக்கிறார்களாம். கடந்த ஆண்டில் பாதுகாப்பு இலாகாவுக்கென ஒரு தொகை ஒதுக்கப்பட்டதாம், சில சீர்திருத்தங்களைச் செய்ய. அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இதுவரையில் தூங்கி விழித்திருக்கிறார்கள். அந்த மந்திரி சபையினர். என்ன செய்யலாம், எப்படித் திட்டம்போட்டு செலவழிக்கலாம் என்பதே புரியவில்லையாம் அவர்களுக்கு. ஓராண்டுக்குப் பிறகு உண்மை இப்போது வெளியாகிறது!

திட்டம்போட்டுக் கொடுத்துப் பணத்தைச் செலவழிக்கச் சொன்னால் விரயமும் வீண் நஷ்டமும் ஏற்படுகிறது. பணத்தைத் தூக்கிக்கொடுத்துத் திட்டம் போட்டுக் காரியங்களைச் செய்யுங்கள் என்றால், விழிக்கிறார்கள், திகைக்கிறார்கள்! வெள்ளையன் ஒழுங்காக நிர்வாகம் நடாத்திய இலாகாக்களையே ஒழுங்காக நிர்வகிக்கத் தெரியாது கோடி கோடியாகத் தொலைத்துத் தலை முழுகுகிறார்கள்!

*

இந்த அழகிலிருக்கிறது டில்லி. இவ்வளவு 'ஒழுங்காக' ஆட்சியை நடத்த மொத்தம் டில்லியில் எத்தனை மந்திரிகள் இருக்கிறார்கள் தெரியுமா? அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், உதவிக்கு உதவி அமைச்சர்கள் என்று ஆகமொத்தம் **45 பேர்** இருக்கிறார்களாம். மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள், 45 மந்திரிகள் உளளனர். இந்திய உபகண்டத்தை ஆள. நேரு பண்டிதருக்கே யாரார் நமது மந்திரிகள் என்பது விளங்குவதில்லையாம்! அவ்வளவு மந்திரிகள் இருக்கிறார்கள். இதன் காரணமாக ஒரு நாள் உலகமே கண்டிராத விசித்திர நிகழ்ச்சியொன்றும் நடைபெற்றது — டில்லி சட்டசபையில். ஒரு உறுப்பினர் கேள்வி கேட்க, அதற்குப் பதிலளிக்க எழுந்தார் ஒருவர். அவரைக் கண்ட சபைத் தலைவர் அனந்தசயனம் திகைத்து, "யார் நீங்கள?" என்று கேட்க, "நான் ஒரு மந்திரி!", என்று பதிலுரைத்தார் அவர். சபைத் தலைவருக்கே மந்திரியைத் தெரியவில்லை. "எப்போது முதல்?", என்றார் அனந்தசயனம். "நேற்று முதல்!" என்றார் மந்திரி ஆசனத்திலிருந்தவர்.

"இனிமேல் இன்னின்னார் மந்திரியாக்கப் பட்டிருக்கிறார் என்கிற விபரத்தையாவது கொஞ்சம் எனக்குச் சொல்லி ஆட்களையும் அறிமுகம் செய்துவையுங்கள்," என்று பரிதாபமாகத் தெரிவித்திருக்கிறார், அனந்தசயனம்.

இவ்விதம், நினைத்தால் ஒருமந்திரி, முரண்டுகிறவர் என்றால் ஒரு மந்திரி பதவி என்று நேருசர்க்கார் வைத்திருக்கும் இந்த மந்திரிமார்களுக்காக சம்பளம் — அலவன்சு — போக்குவரத்துச் செலவுகள் என்கிற பெயரால் ஒரு ஆண்டில் **3 கோடி 76-லட்சம்** ரூபாய்கள் செலவழிகிறதாம்!

வெள்ளையன் ஆறு ஏழு பேரைக் கொண்ட நிர்வாகக் கவுன்சில் மூலம் இந்த உபகண்டத்தை ஆண்டான்— நேருவுக்கோ 45-பேர் தேவைப்படுகிறார்கள். இப்படி 45 பேரிருந்தும்,

**பணத்தைச் செலவழிக்கத் திட்டம் போடத் தெரியவில்லை.**

**திட்டமிட்டுச் செய்தாலும் பணம் கரியாகிறதே ஒழிய, காலம் செல்லச் செல்ல அனுபவம் அடைகிறோம் என்கிறார்கள்!**

இப்படிப்பட்ட மந்திரிமார்கள், ஒழுங்காகவாவது பார்லிமெண்டுக்கு வருகிறார்களா என்றால் அதுவும் வேடிக்கையாக இருக்கிறது. சபையில் காரசாரமாகச் சர்க்காரின் தவறுகளைப் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர் எடுத்துரைத்துக்கொண்டிருப்பார்-சர்க்கார் பெஞ்சிலோ யாரும் இருக்கமாட்டார்கள்! அமைச்சர்களில் ஒருவரும் சபையில் இருக்கமாட்டார்கள். 45-பேர்! ஆனால் சபை நாற்காலி காலி! இந்த அலங்கோலத்தை இந்தக் கிழமை கூட டில்லி சட்டசபையில் அனந்தசயனம் சுட்டிக்காட்டி முகாரி பாடியிருக்கிறார்.

நம்மை ஆளவந்த இப்படிப்பட்ட அழகு பூபதிகளுக்கு பணத்தை அள்ளி அள்ளி வழங்குவதுமட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய சுகானுபவங்களையும் கூடத் தருகிறது, டில்லி!! மந்திரிமார்களின் மனைவிமார்களுக்கும், உறவினர்களுக்கும் கூட அடிக்கிறது யோகம். நாம் கட்டும் வரிப் பணத்தை அனுபவிக்கிறார்கள். "எல்லோரும் அண்மையில் சந்தா எனும் ஒரு அமைச்சர் இந்தியக்கலைக்குழு ஒன்றை அழைத்துக்கொண்டு ரஷ்யா முதலிய இடங்களுக்குப் போய் சுமார் இரண்டு மாதம் சுற்றி விட்டு வந்தாரல்லவா?" அவர் கூட அவர் மனைவியாரும்போனாராம்! அவருக்கும் சர்க்கார் செலவுதானும். "இது நியாயமா?",என்று பார்லிமெண்டில்கேட்டபோதுபண்டிதநேரு, "என்னமோ, புருஷன்போனார்என்று மனைவியும் போனார்", என்றுபதில் தரவில்லை. அதில் தாங்கள் நடந்து கொண்டிருக்கும் நீதியை நிலைநாட்டுவது போல "ஏன் மனைவி போனார் தெரியுமா? கலைக்குழுவில் சென்ற பெண்களைக் கட்டிமேய்க்க ஒரு பெண் தேவைப்பட்டது. அதனால் போனார்" என்றார். இது உண்மை விளக்கமல்ல. ஊரே அறியும், மந்திரியின் மனைவிக்காக சர்க்கார் செலவழித்தது தவறு என்பதை உணர்ந்த நேரு, சுற்றி வளைத்துச் சமாதானம் கூறுகிறார் என்பதை.

* * *

பணம் இப்படியெல்லாம் போய்க் கொண்டேயிருக்கிறது! இவ்வளவு அழகான — புத்திசாலிகளான — அமைச்சர்களை, டஜன் கணக்கில் வைத்துக்கொண்டிருக்கிறோம்! அவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொட்டிக் கொட்டிக் கொடுக்கிறோம்!—எப்படி பணம் போதும்? நன்மைகள் மலரும்? இவர்களை நம்பினால் எங்ஙனம் திட்டங்கள் வெற்றிபெறும்? இருந்தும், நான் தயங்கப்போவதில்லை வரிபோட, என்கிறார் புதிய தயாபரர். ஏழை, இப்படியெல்லாம் வரிகொடுத்து, ஏங்கத்தான் பிறந்தான்போலும் இந்த நாட்டில்.

★

> "அரசியல் அமைப்போ, பகுத்தறிவு மார்க்கமோ, தூய ஒழுக்கங்களோ, அறவே அறியாதிருந்த நாட்டில் தோன்றிய திருநபியவர்கள், அம் மூன்றையும் தம்முடைய தனிப்பெரும் திறனாலே போற்றிப் புகழத்தக்க முறையிலே நிலை நிறுத்தினர்கள்."
>
> —ரெவரெண்ட்,
> ஸ்டீபென்ஸ்

6-ம் பக்கத் தொடர்ச்சி

ராயைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றினர் — 'தள்ளாத வயதிலே, இந்த எதிர்ப்புத் தருகிறீர்களே, தகுமா?'' என்றார். 'எதிர்ப்பு உம் மீது அல்ல; எம்மைத் துச்சமாக மதித்த உமது போக்கினை எதிர்க்கிறோம், என்றனர் வங்க மக்கள்! ஆர்பரிப்பு அமளியாற்று! அடக்குமுறை, அமளியைக் காட்டுத் தீயாக்கிற்று! வங்கமும் பீகாரும் இணைந்து ஒரு பேரரசாகும் என்று பேசிவிட்டு வந்த டாக்டரே, பிறகு, இணைப்பு இல்லை! வங்கம் வங்கமாகவே இருக்கும்! என்று அறிவித்தார்! மக்கள் வெற்றிபெற்றனர்.

இதுபோல, வடக்கே, ஒவ்வொரு மாநிலத்தாரும் தத்தமது உரிமையைப் பாதுகாத்துக்கொண்ட பிறகு, தேசியக் காலட்சேபம் செய்கிறார்கள்!

விருந்ினை முடித்துக்கொண்டு, பட்டுப்பட்டாடை அணிந்துகொண்டு, பீடத்தில் அமர்ந்து, விரலில் உள்ள வைர மோதிரத்தைப் பளபளப்பாக்கிக்கொண்ட பிறகு,

வாழ்வாவது மாயம்
செல்வம் ஒரு பிசாசு

என்று வேதாந்தம் பேசும், பாகவதரைப் பார்க்கிறோமல்லவா, அதுபோல் வடக்கே உள்ள தலைவர்கள் இங்கு வந்து நமக்குப் பேசுகிறார்கள்—வேறென்ன!

தம்பி! வடக்கே உள்ள மக்கள், தத்தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலே, தவறுவதில்லை. அதற்கான உரிமைக் கிளர்ச்சிகளிலே மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்பது மட்டுமல்ல, அந்தக் கிளர்ச்சிகளில்,

வெறுக்கத்தக்க பலாத்காரத்தை,
கண்டிக்கத்தக்க காலித்தனத்தை,

புகுத்துகிறார்கள்!

இங்கு, நாம் நமது மாநில உரிமைக்காக, மொழி உரிமைக்காக நடத்துவது இன்னும் கிளர்ச்சி உருவம்கூட எடுக்கவில்லை! நியாயத்தை எடுத்துரைக்கிறோம்; காரணங்களைக் காட்டுகிறோம்; நீதி கோருகிறோம்; இதற்கே, எவ்வளவு இடி, இழிச்சொல்! எத்துணை அடக்குமுறை; தாக்குதல்!

நேருபண்டிதர் சிலையை உடைக்கும் அளவுக்கு வடக்கே காலித்தனம் நடக்கிறது, அதற்குத் துப்பாக்கி தூக்குகிறது, அங்கு உள்ள துரைத்தனம். இங்கு நாம், பொது மக்களிடம் முறையிட்டுக்கொள்கிறோம், அதற்கே, துப்பாக்கி தூரத்துகிறது!

இந்த இலட்சணத்திலே, மொரார்ஜிபாயை அழைத்துக்கொண்டு வருகிறார்கள் இங்குள்ள அமைச்சர்கள், நமக்கு 'தேசிய' பாடம் போதிக்க! வெட்கம்! வெட்கம்! என்று கூறுவதன்றி வேறென்ன கூறுவது?

நான் பன்னிப்பன்னிக் கூறிவருகிறேன், 'இல்லாத ஒன்றை, இயற்கையாக எழாத ஒன்றினை, எத்தனை பெரிய தலைவர்களானாலும், அறிவாளர்களாயினும், ஆற்றலரசர்களாயினும் கூடி முயற்சித்தாலும், புகுத்தி நிலை நிறுத்திவிட முடியாது' என்பதனை. காங்கிரஸ் நண்பர்கள் ஏதோ 'தேசிய ஒற்றுமை' என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது போலவும், அதனை நாம் பாழாக்குவது போலவும் எண்ணிக்கொண்டு வேதனைப்படுகிறார்கள், வெகுண்டெழுகிறார்களே யன்றி, இயற்கையாக எழ முடியாத ஓர் உணர்ச்சியை இட்டுக்கட்ட முயற்சிப்பது, தவறு என்பதை அறிந்திருந்த அஞ்சுகிறார்கள். தம்பி! வெண்ணெய்ச் சட்டியை வெளியே வைத்திருந்தால் பூனை களவாடித் தின்றுவிடும் என்று பயந்துகொண்டு, வீட்டுக்கரசி, அந்த வெண்ணெய்ச் சட்டியை எடுத்து அடுப்புக்குள்ளே செருகி வைத்தால் என்ன ஆகும்!! 'தேசியம்' பேசுவோர், நம்மீது குறைபட்டுக் கொள்கிறார்களே யன்றி இந்தப் பேருண்மையை உணர மறுக்கிறார்கள்.

எத்தனை எத்தனையோ நெருக்கடிகள், தாக்குதல்கள், இடிகள் இழி நிலைகள் ஆகியவற்றினுக்குப் பிறகும் தமிழன் என்ற ஓர் உணர்ச்சி இன்றும் மகிழத்தக்க அளவுக்கும், நம்பிக்கைதரத்தக்க வகையிலும், மின்னிக்கொண்டு இருக்கிறது என்றால், தம்பி! இந்த உணர்ச்சியைப் பெற, எத்தனை எத்தனை நூற்றாண்டுகள், எவ்வளவு பெரும் பெரும் அறிவாளர்கள், என்னென்ன வகையினாலே பணியாற்றினர், தெரியுமா! அவ்வளவையும் அரை நூற்றாண்டில் அழித்துவிட முடியும் என்று எண்ணிக்கொண்டனரே, அதிலே தான் தவறு இருக்கிறதே தவிர, நம்மீது என்ன குற்றம்?

சிலம்பு ஒலிக்கவில்லை, சிந்தாமணி மின்னிடவில்லை, அகம் இல்லை, புறம் இல்லை. தொல்காப்பியம் ஏதுமில்லை. எனினும், குஜராத்தி தன் மொழிக்கு ஏற்றமும் உரிய இடமும், தனித்தன்மையும், இவைதமைக்கெடுத்திடாத தனிக்கொற்றமும் தேவை என்று கேட்கலாமாம், கேட்பதுடன் விடாது கேடுபல நேரிடுமே என்றுகூட எண்ணிடாமல், அமைச்சர்களை விரட்டலாமாம், அமளி பலவற்றினை மூட்டிவிடலாமாம், இங்கு நாம் மட்டும், அருந்தமிழ் மரபு காத்திட, 'உம்' மென்றாலும் 'இம்' மென்றாலும் தேசியம் கெடுமாம், பாரதீயம் பாழ்படுமாம், நாடு நலியுமாம்! என்ன அறிவீனம்!! என்று சீறிக் கேட்பதா? என்னே உமது ஓரவஞ்சனை? என்று துக்கத்துடன் கேட்பதா? நம்மை எவ்வளவு 'ஏதுமறியாதார், இனப்பற்று இல்லாதார், மரபு காத்திடும் வழி அறியாதார்' என்று எண்ணிக்கொண்டிருந்தால், மொரார்ஜிகளைக் கொண்டுவந்து இங்கு பேசச் சொல்வார்கள் என்பதை எண்ணிப் பார், தம்பி. எண்ணச் சொல்லிப் பார், காங்கிரஸ் நண்பர்களை.

பூவிருந்தவல்லியிலே மொரார்ஜி வந்து பேசிவிட்டுச் சென்றார்; என் மாநிலத்திலேகூட இந்த அளவுக்கு எனக்கு மதிப்பளிப்பார் இல்லை, இங்கு என் புகழ்க்கொடி சிறப்புறப் பறக்கிறது என்று கூட மகிழ்ந்திருக்கக்கூடும்; ஆனால் இங்கு அவர்,—''தமிழ், என மொழி! தாய் மொழி! தமிழ் நாடு! தனி நாடு என்றெல்லாம் பேசுவது தீது, தவறு, தேசியமாகாது'' என்றெல்லாம் பேசினாரே, அதுபோல, பக்தவத்சலனாரை குஜராத்திலே சென்று பேசச் சொல்லு, பார்ப்போம்; அழகேசரை ஆமதாபாத் போகச் சொல்லு; காமராஜரை பூனா போய், "மராட்டிய மக்களே! ஏன் உங்கள் மதி இப்படிக் கெட்டுவிட்டது!'' என்று கேட்கச் சொல்லு. பட்டாளம் அணி

வகுத்து நின்றாலும் இவர்கள் தலை தப்புவது கஷ்டமாகிவிடும்! ஆமாம், தம்பி, அந்த அளவுக்கு அங்கெல்லாம் உரிமை உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிகிறது! இங்குதான், அபிசீனிய மன்னர் வரலாம், அகவல் எதுக்கு, ஆங்கிலப்பாடல் போதாதோ என்று பேசலாம், தலாய்லாமா வரலாம், திருவாசகம் எதுக்கு எமது திருப்பாதம் வீழ்ந்து வணங்கினால் போதாதோ என்று வினவலாம், தாழ்ந்து கிடக்கும் இந்தத் தமிழகத்திலேதான், தருக்கரின் பிடியிலே சிக்கிவிட்ட தமிழகத்திலேதான், உலகின் எந்தக் கோடியிலிருந்தும் எந்த வகையான தலைவரும் வரலாம், தமிழரின் மரபினை இகழலாம், தமிழரைக் கண்டித்துரைக்கலாம்; அதற்கு அவர் தமக்கு மாலையிட்டு மகிழ்விக்க, போற்றிப் புகழ்ந்திட, இங்கு பக்தவத்சலனார் படை வரிசை இருக்கிறது! வேறெங்கும் இந்நிலை வரவிடமாட்டார்கள்! ஏது மற்ற நிலையைக்கூடப் பொறுத்துக்கொள்வர், எவர் வேண்டுமாயினும் எதை வேண்டுமானாலும் கூறிடும் இழி நிலைக்கு மட்டும் இடமளிக்கமாட்டார்கள்! பிச்சை எடுப்போன்கூடத் தம்பி, இல்லை போ! என்றால் ஏக்கத்துடன் சென்றிடுவான், மச்சு வீடுடையோனாயினும் அவனைப் பார்த்து, "ஏ! பிச்சைக்கார பயலே!" என்று பேசினால், எச்சிற் பண்டத்தைப் போட்டு வைத்திருக்கும் குவளையால் அடித்துவிட்டுக் கூறுவான், "மச்சு வீடு என்றாமே உனக்கு நிலை என்ற எண்ணமோ, நானும் எனக்கென்று ஓர் 'குச்சி' இருந்து அதிலே வாழ்ந்தவன்தான்! ஏன் உனக்கு இந்த வாய்த்துடுக்கு?" என்று கோபத்துடன் கேட்பான். போலீஸ் சுற்றியபடி இருப்பதால், இன்று மச்சு வீட்டுக்காரனுக்கு இது நேரிடாதிருக்கிறது! தம்பி! அதனினும் இழிந்த நிலையிலன்றோ நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். சர்கசில் காண்கிறோமே, காட்டரசனும் சிங்கத்தைக் கூட்டிலே நிற்கச்செய்து, அதன் முதுகின் மீது ஆட்டுக் குட்டியைச் 'சவாரி' செய்யவைக்கிறானல்லவா, கரத்திலே துப்பாக்கி வைத்திருக்கும் 'கரடி' வித்தைக்காரன! அது போலத்தான தமிழக நிலைமை இருந்திடக் காண்கிறோம்!! அது போனற நிலைமை என்றால் கூடப் போதாது; இங்கு 'ஆடு' வீரம் பேசிட, அரிமா அடக்க ஒடுக்கமாக அதனைக் கேட்டுத் தீர வேண்டி இருக்கிறது.

மொரார்ஜிகள் பேசும்போது, மரபு மறவாத தமிழர் ஒவ்வொருவருக்கும் இது போன்ற எண்ணம் தானே ஏற்பட்டிருக்க முடியும்!! தேர்தலுக்கு எப்படி இது பயன் படப்போகிறது!!

'இந்தியா' ஒன்று, என்று நமக்காகப் பேசிடும், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கே கூட, குட்டும், குத்தும் வலி தருமளவுக்கு ஏற்படுகிறபோது, என்ன பேசுகிறார்கள் என்பதை நாடு மறந்தா போய்விட்டது! எத்தனை எத்தனை முறை குமுறி இருக்கிறார்கள், இவர்கள் தம் நாத் தழுமபேறப் பேசுகிறார்களே 'தேசியம்' அது, அப்போதெல்லாம் ஏன் மறைந்து படுகிறது?

டில்லி பாராளு மன்றத்திலேயே டாக்டர் லங்காசுந்தரம் என்பார் "அரசியல் அதிகாரம் அனைத்தும் வடநாட்டிலேயே குவிக்கப்பட்டிருக்கிறது" என்று பேசுகிறார்; 1955 டிசம்பர் 14-ல்!

பொருள் என்ன இதற்கு? இத்தனைக்கும் இந்த டாக்டர்கள் நம்மை எல்லாம், நாட்டைப் பிடித்தாட்டும் 'நோய்' என்று கூசாது பேசுபவர்கள்! அவர்போன்றாருக்கே பொறுக்கவில்லை, வடக்கே எல்லா அதிகாரங்களும் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கொடுமை.

சென்னை சர்க்கார் அமைத்த ஆலோசனைக் குழுவே, 1955, மே 30-ல்,

> **"பெருந்தொழில்களைப் பொறுத்த மட்டில் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது"**

என்று அறிவித்தது. ஏன், இந்த அழுகுரல்?

**புறக்கணிக்கப்பட்டிருக்கிறது**

என்ற உண்மையையும் கூறுகிறது அந்தக் குழு; அதனால் நாடு வருந்துகிறது, வருந்தவேண்டும், என்ற எண்ணத்தையும், விளக்கிட,

**வருந்தத்தக்க**

என்றும், எழுதுகிறது! 'தேசியம்' எங்கே ஓடிவிட்டது, இதுபோலக் கேட்கும்போது? இங்கே பெரிய தொழில்கள் இல்லையே என்ற கவலை குடைவானேன்? வருத்தம் பிறப்பானேன்? எங்கே இருந்தால் என்ன என்ற வேதாந்தம் ஏன் பிறக்கவில்லை! ஏன், புறக்கணிக்கப்பட்டுவிட்டதே என்ற துக்கம் துளைக்கிறது! அந்த உணர்ச்சி உங்கள் உள்ளத்திலே சுரக்கும் போதெல்லாம், அருமைக் காங்கிரஸ் அன்பர்களே! நீவிர் அனைவரும், தி. மு. க. ஆகிறீர்கள்! பிறகு, பதவி, வேறு பக்கம் அழைக்கிறது, மோசம்போகிறீர்கள், மொரார்ஜீயை அழைக்கிறீர்கள்.

சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் 1955-ல் கூறிவிட்டு, இப்போது தேர்தலில் ஓட்டு பறிப்பதற்காக, நீங்களே, தாரை தப்பட்டையுடன் கிளம்பி, தமிழாவது தெலுங்காவது வடக்காவது தெற்காவது எல்லாம் அபத்தம், தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதாகக் கூறுவது பொய்யுரை, என்று பேசுகிறீர்களே, எதையும் ஆய்ந்தறியும் திறனும், முன்பின் பேச்சுகளை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காணும் போக்

## தேர்தல் ஞானோதயம்!

ஆண்டவன் மீதுள்ள பக்தி குறைந்தமையாலே நாடு முன்னேறவில்லை என்று அடிக்கடி அந்தாதி பாடத் தவறாதவர், அமைச்சர் பக்தவத்சலம். அவரை சட்ட சபையில் கேட்டாராம், செல்லத்துரை என்பவர், "மழை பெய்வதும் பெய்யாததும் இறைவன் திருவருள் என்று நம்பப்படுகிறதல்லவா? ஆதலின் செயற்கை மழை உற்பத்தித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை, மக்களிடையே தெய்வ பக்தியைப் பரப்புவதற்கு அரசாங்கம் செலவழிக்குமா?"

கேள்விக்கு, ஆஸ்தீக பக்தவத்சலம், "அதிலென்ன சந்தேகம்? ஐயனை நம்பினோர் கைவிடப்படுவரோ" என்றுதானே பேசியிருக்க வேண்டும். ஆனால், அவர் இப்படி பதிலளித்தாராம், "தெய்வத்தின் அருளால்தான் எல்லாம் நடக்கிறது என்று எண்ணிக்கொண்டு அங்கத்தினர் வரப்போகிற தேர்தலின்போது வீட்டில் உட்கார்ந்து கொண்டே பரீட்சித்துப் பார்க்கட்டும்" என்று. எப்படி ஞானோதயம்.

கும் கொண்ட மக்கள், உமது புரட்டினைக் கண்டுகொள்ளமாட்டார்களா? என்று கேட்டால், காங்கிரசின் பெருந்தலைவர்கள் கூறும் பதில், "அவ்வளவு அறிவுத் தெளிவு உள்ளவர்கள், எத்தனை பேர் இருக்கிறார்கள்" என்பது தான்.

தம்பி! நம் நாட்டுப் பாமர மக்களைக் காங்கிரசார், எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைக்கலாம் எதைச் சொல்லியும் நம்பவைக்கலாம், என்று மனப்பால் குடிக்கிறார்கள். மக்கள் இதோ, நான் புட்டுப் புட்டுக் காட்டுவதுபோலப் பிரச்சினைகளை அலசி ஆராயாமலிருக்கலாம், ஆனால் அவர்களுக்கு உண்மையை ஒரு நொடியில் உணர்ந்துகொள்ளும் திறன் இருக்கிறது; காங்கிரஸ் தலைவர்களின் புரட்டினை, மக்கள் உணர்ந்து வருகிறார்கள்; நமது பிரசாரம் இதனைப் பலப்படுத்துகிறது!! மொரார்ஜிக்கள் வருவதாலே, இந்த நம் பணி குந்தகப்பட்டுவிடாது!!

வடநாட்டிலிருந்து இங்கு மொரார்ஜிகள், அடிக்கடி வந்தபடி இருப்பதையும், அவர்கள் வருகிற போதெல்லாம், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், வணங்கி வரவேற்று, வரம் கேட்டுப் பெறுவதையும், காணும் தமிழக மக்கள், அந்த நாட்களில் இங்கு வந்த வெலிங்டன், கோஷன், எர்ஸ்கின் போன்ற துரைமார்களிடம் எப்படி இளித்துப்பேசி இனிப்புப் பண்டம் பெற்றார்களோ, சீமான்கள், சிற்றரசர்கள், மிட்டா மிராசுகள், அதே செயலைத்தான், இப்போது பக்த வத்சலங்கள், மொரார்ஜிகள் வருகிறபோது செய்கிறார்கள். முறை மாறவில்லை, ஆள்மட்டும்தான் மாறியிருக்கிறது என்பதையா தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள்.

'ஓட்டு' வாங்குவதற்காக, தம்பி' காங்கிரஸ் பிரசாரகர்கள், ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளைப் பேசுகிறார்களல்லவா! எல்லாப் பேச்சாளர்களுமல்ல, மிகச் சிலரே, அந்தச் சிரமத்தை எடுத்துக்கொள்வர்—பெரும்பாலானவர், நம்மை ஏசி விட்டாலே போதும், என்று எண்ணிக் கொள்கிறார்கள்—உண்மையிலேயே சிலருக்கு, மிகக் காரமாக நம்மை ஏசுவதால் ஏற்படும் நாக்கெரிச்சலே வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் பேச இடமளிக்காது—நான் இந்தப் போக்குக்கு விதிவிலக்கு என்று குறிப்பிடத்தக்க இரண்டொருவரைக் கூறுகிறேன் — அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்திலே பெற்ற அரிய வெற்றிகளைக் கூறி, ஓட்டு கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள். மக்கள், அதைக்கேட்கும்போது உள்ளபடி திகைக்கிறார்கள். பெருமைப்படத்தக்க, மகிழ்ச்சி கொள்ளத்தக்க வெற்றிகள் கிடைத்துள்ளன; நாடு, நலிவு போக்கிக்கொண்டது; எல்லோருக்கும் இன்ப வாழ்வுக்கு வழி ஏற்பட்டுவிட்டது; எனறெல்லாம் பேசும்போது, மக்கள் தம்மைச் சூழ இருக்கிற வறுமையைப் பார்க்கிறார்கள்; தமது சொந்த வாழ்விலே கப்பிக்கொண்டிருக்கும் சோகத்தைப் பார்க்கிறார்கள்; என்ன அதிசயம், இது! ஐந்தாண்டுத் திட்டத்தின் அரிய வெற்றியாலே பாலும் தேனும் ஓடுவதாகச் சொல்கிறார், இந்தப் பாழும் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே; நாம் பார்க்கும்போது, பழங்கலமும் அதிலே உள்ள பழஞ் சோறும், அதிலே நெளியும் பூச்சிப் புழுவும் தெரிகிறது! இவர், ஏதோ, இங்கு வளம் கொஞ்சுவதாகக் கூறுகிறாரே! எங்கே அந்த வளம்? யாருக்குப் பயன்படுகிறது அந்த வளம்! என்றுதான், எண்ணித் திகைக்கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டத்திலே அரிய வெற்றிகள் ஏற்படவே இல்லையா? என்று கேட்டால், ஏற்பட்டது! எப்படி ஏற்படாமலிருக்கும், இரண்டாயிரம் கோடி ரூபாயைச் செலவிட்டிருக்கும்போது! ஆனால், நமது கேள்வி, நாட்டு மக்களின் கேள்வி, அதனால் ஏற்பட்ட பலன், யாரை வாழ வைத்திருக்கிறது என்பதுதான்! இதற்கு மொரார்ஜிகள் தரக்கூடிய பதில் என்ன? இதோ என்னிடம் உள்ள பட்டியல்! நீயும் படித்துப் பார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன திட்டங்கள்:

1. நந்திகொண்டா
2. கோசி
3. காக்ராபார்
4. ஹரிகே
5. துங்கபத்ரா
6. (டி. வி. சி.) தாமோதர்
7. கோய்னா
8 ஹிராகூட்
9. பக்ரா—நங்கல்
10. ரீகண்டு
11 மயூராட்சி
12. சாம்பால்
13. பத்ரா
14. கட்டபிரபா
15. தூத்வா
16. கீழ் பவானி
17. மச்சகந்த்
18. சாரதா
19. ஜோக்
20. மாஹி
21. காந்தி சாகர்.

இவைகளெல்லாம் முதல் ஐந்தாண்டுத் திட்ட வெற்றிகள்.

இவைகளில், இங்கு பலன் தந்திருப்பது, எத்தனை என்று கேட்டுப் பார், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்ற கணக்கு கேள், வடக்கே உள்ளவை எத்தனை? செலவிடப்பட்ட தொகை எத்தனை? என்று கணக்குக் காட்டச் சொல்லு, பிறகு ஓட்டுச்சாவடிக்குப் போகட்டும் மக்கள்!

"நீயும் நானும் ஒற்றுமையாக இருக்கலாம்! உன் கைக் கடியாரத்தை என்னிடம் கொடுத்துவை! உனக்குத் தேவைப்படும்போது, நான் மணி பார்த்துச் சொல்லுகிறேன்"-என்று பாரிஸ் பட்டினத்து எத்தன் ஒருவன் சொன்னதாக நான் படித்திருக்கிறேன். மொரார்ஜிகளும், அவர்களின் அடிதாங்கி, அரசியலில் இலாபம் தேடுவோரும், பேசும் 'ஒற்றுமை' இதுபோன்றதுதான், வேறில்லை!

நாடு இதனை, மெள்ள மெள்ள அறிந்துகொண்டு வருகிறது; தேர்தலின்போது மேலும் தெளிவு ஏற்படப்போகிறது! நிச்சயமாக!!

**தொழில் வளர்ச்சித் திட்டங்களில் தென்னிந்தியா இந்தியப் பேரரசால் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறது.**

என்று, சென்ற ஆண்டு ஜூலையில் மைசூர் சட்டசபையில், மைசூர் தொழில் மந்திரி, சென்ன பசப்பா பேசி இருக்கிறார்.

இவர் என்ன, ஓட்டுக்கேட்க வரும், தி. மு. கழகமா? அல்லவே!!

நாடு, எண்ணிப்பார்த்திடவே செய்யாதா? எண்ணிப்பார்த்திடும்படி செய்யும் பணியினைத்தானே நாம், மேற்கொண்டிருக்கிறோம். அது எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறது என்பதைப் பொறுத்துத்தான், தேர்தலில் நாம் வெற்றி பெறுவது இருக்கிறது.

நாடெங்கும், வீடெங்கும், இந்தப் பேச்சு எழவேண்டும்; அதை ஆக்கித் தரும் பணிதான், தம்பி, உன்னிடம் நான் எதிர்பார்க்கிறேன்.

## தாயும் மகனும்

மகன்:- எப்போதும் அழுது கொண்டே இருக்கிறாயே, ஏனம்மா?

தாய்:- மகனே! என்னடா செய்வது, உன் அப்பாவுக்கு இன்னமும் ஒரு வேலை கிடைக்கவில்லையே! அந்த வேதனைதான்!

மகன்:- அப்பா, ஏனம்மா வேலைக்குப் போகாமலிருக்கிறார்?

தாய்:- வேலை கிடைக்கவில்லையடா மகனே!

மகன்:- போம்மா! அப்பா ஏமாற்றுகிறார்! வேலைதான் நிறைய கிடைக்கிறதாமே!

தாய்:- யாரடா அப்பா, சொன்னது?

மகன்:- நேற்று, கூட்டத்திலே ஒரு மந்திரி சொன்னார், அம்மா! ஐந்தாண்டுத் திட்டம் போட்டார்களாம்—நாடு சுபீட்சமாகிவிட்டதாம் — வேலை எல்லோருக்கும் கிடைக்கிறதாம்.

தாய்:- காங்கிரஸ் கூட்டமாடா மகனே!

மகன்:- ஆமம்மா!

தாய்:- அங்கு அப்படித்தான் மகனே! பொய்யை மளமளவென்று கொட்டுவார்கள்... சுபீட்சமாகிவிட்டதாமா, நாடு... நம் வீட்டைப் பார்த்தால் தெரியவில்லையா இலட்சணம்! வேலையா கிடைக்கிறது, வேலை! யாருக்கு? இந்தக் காங்கிரசுக்குப் பக்கமேளம் அடிக்கிறவர்களுக்கு வேலை கிடைக்கிறது! அதுவும் என்ன வேலை? இவர்களை இந்திரன், சந்திரன் என்று புகழ்கிற வேலை! வயிற்றெரிச்சலை ஏண்டா மகனே, கிளப்புகிறாய்...

மகன்:- ஏம்மா, அப்படியானா, பொய்யா பேசறாங்க...

தாய்:- எலக்ஷன் வருதடா, மகனே! அதனாலே, மக்களை ஏமாளியாக்கி ஓட்டுவாங்க அது போலப் பேசுகிறார்கள்.

மகன்:- நான் ஒரு சின்ன பொய் பேசினா, காதைப் பிடித்துக் கிள்ளி, கன்னத்திலே அறைகிறே...!

தாய்:- போடா, குறும்புக்காரா!...

மகன்:- காங்கிரஸ்காரர், நாடு சீர்பட்டுவிட்டது, எல்லோருக்கும் வேலைகிடைத்துவிட்டது என்று பொய்யை வாரி வாரி வீசறாங்க ...அவங்களை, என்ன செய்தே ......?

தாய்:- என்ன செய்தேனா...தேர்தல்வருது...மகனே! அப்போது தானே, அவங்களுக்குப் புத்தி புகட்ட வேணும......பார், அப்போது...

மகன்:- ஆமாம்மா! பெரிய மனுஷருங்க பொய் பேசுகிறபோது, புத்தி சொல்லாமே விட்டுவிட்டா என்னைப்போல சின்னப் பசங்கக்கூடக் கெட்டுப் போயிடுவாங்கம்மா...

தாய்:- ஆமாண்டா, மகனே! இப்படிப்பொய்யைப்பேசி ஜனங்களை ஏமாத்துகிற காங்கிரசுக்கு மறுபடியும் ஓட்டுப்போட்டா, நாடே கெட்டுப்போகும்......நான் மட்டுமில்லாடா, நம்ம பக்கத்துவீட்டு பங்கஜம், எதிர் வீட்டுத்தாத்தா, கோடிவீட்டுக் குப்பி, நமம மாமன் வீடு, எல்லோருமே இதே முடிவுக்குத்தான் வந்திருக்கிறோம்...


மகன்:- நான்கூட அம்மா, யாராரைப் பார்க்கிறேனோ, அவங்களிடமெல்லாம், இதைத்தான் சொல்லப்போகிறேன்.

தம்பி! எண்ணற்ற இல்லங்களிலே, இதுபோன்ற உரையாடல் நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளது.

எது பற்றியும் கவலைகொள்ளாத இல்லங்கள், நம்மால் என்ன ஆகும் என்று எண்ணும் இல்லங்கள், இவைகளில் எல்லாம்கூட, இதுபோன்ற உரையாடல்கள் எழச் செய்யவேண்டிய பொறுப்பு, உன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டுச் சாவடி போகுமுன்பு, நாட்டு மக்கள், எல்லாப் பிரச்சினைகளையும் அறிந்திடத்தக்க, முறையிலே, ஏசுவோருக்குப் பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கே இடமேற்படாத முறையில், இனிய எளிய, பிறரிடம் பகை காட்டாத தன்மையில், தம்பி, நீ அறிந்துள்ள உண்மைகளை, மக்களுக்கு எடுத்துக் கூறு, அதுபோதும்; ராஜாக்களும் கோடீஸ்வரர்களும் முகாமிட்டுள்ள காங்கிரஸ் நம்மை ஒன்றும் செய்துவிடாது! நாட்டு மக்கள், மீண்டும் ஓர் முறை, கேட்டினை மூட்டிவிடும் காங்கிரசைக் கட்டி அணைத்திட மாட்டார்கள்! அவர்கள், பட்டது போதும் என்ற நிலையில் உள்ளனர். ஓட்டுச்சாவடி போகுமுன்பு நாட்டு மக்களிடம், நிலைமையைக் கவனப்படுத்தினால், போதும்; நாம் மகிழத்தக்க பலன், நிச்சயம் கிடைக்கும். தொடர்ந்து பணியாற்று! வெற்றிக்கு வழி காட்டு!!

அண்ணன்,



### பெரிய வீட்டு விஷயமாம்!

நயா பைசா என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? பார்க்க முடியுமா? சம்பந்தப்பட்ட அமைச்சர் அதனை நமக்கெல்லாம் காட்டுவாரா? என்று சென்னைச் சட்ட சபையில் ஒரு அங்கத்தினர் கேட்டாராம்.

ஓ! அதுவா? அதனை நானே பார்த்ததில்லையே! அது எப்படி இருக்கும் என்று எனக்கே தெரியாதே! அப்படியிருக்க, அங்கத்தினரின் ஆசையை எப்படி நான் நிறைவேற்றுவேன் என்று ஏக்கத்துடன் பதிலளித்தாராம் நமது ரெவினியு அமைச்சர்.

நயா பைசா நடைமுறைக்கு வந்தால், அதனால், பல கிளர்ச்சிகள் ஏற்படக்கூடுமே, ஏன் இந்த நயா பைசா சமாசாரம் என்று தோழர் இரத்னம் எ. எல். ஏ. கேட்டதற்கு, அதெல்லாம் பெரிய வீட்டுச் சமாசாரம், நான் ஒன்றும் சொல்வதற்கில்லை என்று பரிதாபத்தோடு பதிலிறுத்தாராம்அமைச்சர் பெருமான்.

சின்ன வீட்டுக்காரர் பெரிய வீட்டுச் சமாசாரத்தைப் பற்றிப் பேசப் பயப்படுகிறார். அந்தோ, சென்னையே! இதுவா உன் நிலை?

# கலங்கும் ★ ★ கப்பல்!

**"பாண்டுங்"** மாநாடு கூட்டிய இந்தோனேஷியா, கலங்கும் கப்பலாகி வருவதாகச் செய்திகள் வருகின்றன.

இந்தியாவைப்போல அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பூமியாகும் இந்தோனேஷியா. பல சிறு தீவுகளைக்கொண்ட பூபாகம் இது.

இங்கே, ஆளும் கட்சியினரை எதிர்த்து ஆங்காங்கு இராணுவ தளகர்த்தர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனராம். இதனுல், பிரதமராகவுள்ள அலிசஸ்ட்ரமிஜோஜோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு விடுமோ என்கிற அச்சம் பொதுவாக எங்கும் ஏற்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் சக்திமிக்க அரசியல் தலைவர், டாக்டர் சுகர்னுேவாகும். விடுதலை பெற்ற இந்தோனேஷியாவின் குடியரசுத் தலைவராக வீற்றிருப்பவரும் இவர்தான். இவருக்கு அடுத்தபடி துணைத் தலைவர் பதவியிலிருந்த டாக்டர்அட்டா கடந்த சின்னுட்களுக்கு முன்பு தனது பதவியை விட்டு வெளியேறினுர். காரணம், கருத்து வேற்றுமைகள் என்று கூறப்பட்டது.

டச்சுக்காரர்களின் பிடியிலிருந்து இந்தோனேஷியாவை விடுவிக்க இராணுவத்தினரும் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள்! ஜப்பானியர் கடந்த உலகப்போரின் விளைவாக விட்டுப்போன ஆயுதத் தளவாடங்கள், கிளர்ச்சியின்போது மிகப் பயன்பட்டன. அதனுல், சுயராஜ்யம் முகிழ்த்ததிலிருந்து இராணுவத்தினருக்கு, அரசுத் துறையில் பிடிப்பு இருந்தே வருகிறது.

எட்டாண்டுகளுக்கு முன்பு சுதந்திரமடைந்த இந்தோனேஷியா, இன்று கலங்கும் கலமாகக் காட்சியளிக்கக் காரணம், அங்கு ஆள்வோரின் திறமையின்மையே என்று கூறப்படுகிறது. ஒரு மந்திரியே, இலஞ்சம் வாங்கினுர் என்று குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிருர்! இலஞ்ச ஊழலும், வேண்டியோருக்குப் பதவி கொடுத்து பராமரிப்பதும், பணத்தை வீணுடம்பரங்களில் செலவழிப்பதும் மிகுந்து வருகிறது என்று எதிர்க்கட்சியினர் இந்தோனேஷிய அரசைக் குற்றம் சாட்டுகின்றனர்.

அந்நியர் வசமிருந்த ஆட்சியில் அமர்ந்ததும், இந்தக் குறைகள் இருக்கவே செய்யும். ஆனுல், அவைகளைப் போக்கி, நாடு வளம் பெற, தன்னலமும் சுய ஆசையுமற்றவர்களே அரசுப்பீடத்திலமரவேண்டும்! அது விடுதலை பெற்ற ஆசிய நாடுகளில் இல்லாமையால்தான், காங்கிரஸ் போன்ற பெரிய இயக்கம்கூட கண்ருவியாகி வருகிறது. கடந்த கிழமை, இங்குள்ள டி. டி. கிருஷ்ணமாச்சாரி கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிருர் பார்லிமெண்டில். அவருக்கு வேண்டியவர்களுக்கு, இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷனில் உத்தியோகம் வழங்கியிருப்பதாகக் குற்றம் சாட்டினர், பலர்! விடுதலை பெற்ருேரின் கைக்கு ஆட்சி வந்ததும், கிருஷ்ணமாச்சாரிகள் சிருஷ்டிக்கப் படுவதும், அதனுல் இழிவும் பழியும் ஏற்படுவதும் சகஜம்தான். இந்தோனேஷியத் தேசீயக் கட்சியும் இன்று, அந்தக் கட்டத்துக்கு வந்துள்ளது.

அதிகாரத்திலமர்ந்திருப்போர் தத்தமது இஷ்டப்படி கொட்டம் அடிக்கின்றனர், எனும் குமுறல் இந்தோனேஷியா முழுமையும் பரவியுள்ளதாம். சுயராஜ்யம் மலர்ந்ததும் சுக வாழ்வு அரும்பும் என்று கனுக்கண்ட மக்களுக்கும் ஆட்சியின்போக்கு அதிர்ச்சியைத்தருவதாகவே இருந்து வருகிறது. 'பாண்டுங்' மாநாடு கூட்டினுர்களே ஒழிய, பரதவிக்கும் ஏழை வயிறுகளை நிரப்புவதில் அவ்வளவாக வெற்றிபெற வில்லையாம். அதனுல், ஆளும் கட்சிக்கு மக்கள் மன்றத்திலும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறதாம்.

சுதந்திரம் பெற்ற கட்சி, நாட்டை வாழ்விக்க முதலில் எண்ணவேண்டும்! அதற்குப் பரந்த மனப்பான்மையும், எதிர்க்கட்சிகளாக உள்ளவைகளைப் பொது விஷயங்களில் கலந்து போகும் தன்மையும் வேண்டும். அப்போதுதான் அரசியலில், கொள்கை மாறுபாடுகள் எத்தனையோ இருந்தாலும், சமரசமும் சுமுகமும் ஏற்படும். பெரிய வீரரான டாக்டர் சுகர்னுே, இதை ஏற்படுத்தத் தவறிவிட்டார்! சில மாதங்களுக்கு முன்பு, "ஜனநாயகத்திலேயே நாம் ஒரு புதுவித ஜனநாயக முறையை அனுஷ்டிக்க வேண்டியவர்களாயுள்ளோம். அதாவது தற்சமயத்துக்கு இங்கு, முகம் தெரிந்தவர்கள் மட்டுமே ஆளும் வகையில் அரசு நிலை இருக்கவேண்டும்," என்ருர். அதாவது, அரசியல் அதிகாரத்தைப்பெற்ற எங்கள் வசமே இன்னும் கொஞ்ச காலத்துக்கு ஆட்சிப் பிடிப்பு அவசியம் இருக்க வேண்டும். ஏனெனில், அப்பொறுப்பை வகிக்க, எங்களைத் தவிர இப்போதைக்கு யாரும் இல்லை", என்ருர்! இதே போதையில்தான் இங்குள்ளவர்களும் பேசி வருகிருர்கள்— ஆட்சிப் பொறுப்பை வகிக்க எமது காங்கிரசைத் தவிர வேறு எதுவும் இல்லை, என்று! இது ஜனநாயக முறைக்குப் பாடுபடுவதாகாது சர்வாதிகாரம் வரவே வழிகோலும்.

இந்தோனேஷியா, கலங்க ஆரம்பித்திருக்கிறது — சுகர்னுே, தன்னுடைய சக்தியைப்பயன்படுத்தி பிரிந்து போன அட்டா முதலியவர்களை அழைத்து, எதிர்க்கட்சிகளையும் கலந்து அமைதியை உருவாக்கலாம். இல்லையெனில், 'இராணுவ சர்க்காரின் நாடாக' அது ஆனுலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!!

★

## மாதம் 320 ரூபாய் சம்பளம்

"ஜப்பானில் தோட்டி முதல் கவர்னர் வரை ஒரே மாதிரி உடை தரிக்கின்றனர். இதனுல், வகுப்பு உணர்ச்சியை ஒழிக்க உதவியாக இருக்கிறது. வெளியார்களுக்கு எல்லோரும் ஒரே மாதிரி கண்யம் வாய்ந்தவர்களாகத்தோன்றுகிறது. சோஷலிச சமுதாய ஸ்தாபன நோக்கமுடைய இந்தியா உடை விஷயத்தில் ஜப்பானைப் பின்பற்றி எல்லோரையும் ஒரே மாதிரி உடையணியச் செய்வது நல்லது. ஜப்பானில் ஒரு தொழிலாளி சராசரி 320 ரூபாய் மாதச் சம்பளம் பெறுகிருர். முதலாளிகள்-தொழிலாளர் உறவு சுமுகமாக இருக்கிறது. இதனுல் இருதரப்பாரும் உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கரை உள்ளவர்களாக இருக்கிருர்கள்" என்று ஜப்பானுக்குச் சென்ற 6 பேரடங்கிய தூதுகோஷ்டியில் ஒருவரான அஞ்சையா (இ. தே. தொ. ச. காங்கிரஸ், ஐதராபாத் கிளைத் தலைவர்) ஒரு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# கண்ணீர்த் துளிகளின் எண்ணிக்கை

[புலவர்—தில்லை. தா. அழகுவேலன்]

மீன் உண்பதில் மிக விருப்பமுடையது கொக்கு. "ஓடுமீன்ஓட உறுமீன் (பெரிய மீன்) வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்றார் ஒரு புலவர். ஒரு காரியம் செயற்படும் வரையில் அடக்கமாக இருக்க வேண்டும். இடையிடையே ஆரவாரம் செய்தால் அந்தச் செயல் இடையூறில்லாமல் நிறைவேறுவது மிகக் கடினமாகும். இதனால்தான் வள்ளுவரும் கொக்கைப் பிடித்தார் உவமையாக. "கொக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன்; குத்தொக்க சீர்த்தவிடத்து" — என்பது குறள். அடங்கியிருக்கும் பொழுது கொக்கைப்போல அடக்கமாகவும், தன் காரியத்திலே கண்ணாகவும், சமயம் வாய்த்தபோது சோம்பலின்றி விரைந்து செயற்படவேண்டுமெனவும் வற்புறுத்தவே வள்ளுவர் கொக்கை உவமை கூறினர். நாமெல்லோரும் கொக்கைப்பார்த்திருக்கிறோம். நாம் ஒரு பொருளைப் பார்ப்பதற்கும் அறிஞன் ஒரு பொருளை உற்று நோக்குவதற்கும் எவ்வளவோ வேறு பாடுள்ளன. கொக்கைப் பார்த்த தோடல்லாமல் அதனைச் சுவையும் பார்த்திருக்கும் உங்களையே கேட்கிறேன் கொக்கின் கால் எதைப்போன்றிருக்கும்? ........ அவ்வளவு எளிதாக உடனே உவமை சொல்வதற்கு நாமென்ன குறுந்தொகைப் புலவரா? புலவர் கபிலரால் 'தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால்'—என்று அழகாக உவமை கூறிவிடுவார். தினைப்பயிரின் அடித்தட்டை போலப் பசுமையான சிறிய காலையுடையது கொக்கு என்று மிக எளிதாக ஒப்புமை கூறிவிட்டார் அவர். உருவத்திற்கு உவமை கூறியதோடு அமையாமல் அதன் தொழிலுக்கும் விளக்கம் தருகின்றார்—"ஒழுகுநீர் ஆரல்பார்க்கும் குருகு" என்று.

ஓடையிலே சளசளவென்று நீர் ஓடிக்கொண்டே இருக்கிறது. ஆரல் என்னும் (இரும்புச்சத்துடைய) மீனின் வருகையை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டே கால்கடுக்க நிற்கிறது கொக்கு. ஆரல் மீனின் சுவையைக் கொக்கு அறியும். புலவரும் அறிவார்போலும்; ஆரல் பார்க்கும் கொக்கு வேறெதனையும் பாராது. பார்த்தால் அதனுடைய காரியம் கெட்டுப்போகும் என்பதை புலவர் எவ்வளவு அழகாக உணர்த்துகிறார்.

கொக்கினுடைய இறகு எப்படியிருக்கும்? வெண்மையாக இருக்கும் என்று எல்லோரும் கூறுவர். கொக்கின் இறகைப்போல முற்றிலும் நரைத்த தலையையுடைய கிழவி ஒருத்தி குன்றத்தூரில் வாழ்ந்தாள். குமரியாக வாழ்ந்த காலத்தில் குயிலின் சிறகுபோன்று கறுத்திருந்த அவள் கூந்தல் இப்பொழுது கொக்கின் சிறகுபோன்று வெளுத்துவிட்டது. கருப்பு வெளுப்பானது காலத்தின் மாற்றம். அங்கே கருத்தினுடைய ஏற்றம் தெளிவாகின்றது. குன்றத்தூர் கிழவி குமரியாக வாழ்ந்த காலத்தில் நெடுங்காலம் மகப்பேறு இல்லாமலிருந்தாள். கடைசி காலத்தில் அவள் ஆசைக்கு ஒரு மகன் பிறந்தான். மகனைச் செல்வமாக வளர்த்தாள். கல்வி பயிற்றுவித்தாள். மகனும் நல்லறிஞனாக ஆனான். நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் உடையவனாக விளங்கினான்.

அக்கால மறக்குடி மக்கள் நாட்டிற்காகப் போர்க்களத்தில் மடிவதையே பிறவிப்பயன் என்று மனமார எண்ணினர், உரிமைப் போரென்றால் உயிரைப் பெரிதென மதியார். உயிரைப் பணயம்வைத்து உரிமைக்குப் போராடுவர். பெற்றோரும் பிள்ளைகளை அவ்வுணர்ச்சியுடனேயே வளர்த்து வந்தனர். காளையரும் நிலைநில்லா உயிரைக்கொண்டு நிலைத்த புகழைப் பெறவே முயன்றனர்.

அந்நாளில் தமிழ் நாட்டில் உரிமைப்போர் எழுந்தது. போருக்குதவாப் புல்லரெல்லாம் வெளியேறிவிட்டனர். வீரத்தாயரும், வெற்றிக் காளையருமே நாட்டில் தங்கியிருந்தனர். நாளை காலையில் நாட்டுப் போர் தொடங்குகிறது. உதய சூரியன் தோன்றும் நேரத்தில் காளையர் போர்க்களத்தில் தோன்றுவர். சூரியனைக்கண்டு மறையும் இருள்போலப் பகைவர் மறைந்தோடுவர்; என்ற சூழ்நிலை நாட்டில் நிலைத்திருந்தது. முதியவள் சிறுவன் நாட்டுரிமைப்போரில் நாட்டங்கொண்டான். களத்திற்குப் புறப்பட்டான் காளை, வீரத்தாய் வேலெடுத்துக் கையில் கொடுத்தாள். சென்று வா என் செல்வமகனே, 'நாடு வெற்றி பெறுக'—என்று வாழ்த்தி வழியனுப்பினாள் தாய். வீர மகன் களத்திற்கு வந்தான். எதிர்த்த பகைவரை புறமுதுகிட்டோடச்செய்தான்; வென்றான். தன்னை நோக்கி ஓடிவந்த யானையைக் கைவேலால் தாக்கிக் கொன்றான். மாற்றானொருவன் மறைந்திருந்துவிடுத்த அம்பு மார்பிலே பாய முதியவள் சிறுவன் மூர்ச்சையானான்; கடமையை நிறைவேற்றினான். வீரத்தாய் மகன் போர்க்களத்தில் மடிந்தான் என்பதை அறிந்தாள். ஆயினும், நாடு விடுதலைபெற்றது. மகன் வெற்றிக்காக உயிர் கொடுத்தான் என்று பூரித்தாள். அப்பொழுது அவள் கண்களிலிருந்து நீர்த் துளிகள் ததும்பின. ஆம் கண்ணீர்த்துளிகள்தாம், ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயல்லவா? வீரத்தாய் மனக் களிப்பால் உதிர்த்த கண்ணீர்த் துளிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட்டுக் கூற முடியுமோ? துள்ளிதமாகச் சொல்லமுடியாது, தோராயமாக ஒரு கணக்குக் கூறலாம்.

வெதிரம் என்ற மலையில் மூங்கில்கள் நிறைந்துள்ளன. காற்றினால் மூங்கில்கள் அசைந்தாடுகின்றன. கரியமேகம் மலையைக் கவிழ்ந்துகொண்டு துளிகளைப் பெய்தன. அப்பொழுது அம் மலையில் வீழ்ந்த மழைத்துளிகள் எவ்வளவினவோ அவ்வளவினும் பலவாகும் கண்ணீர்த் துளிகளின் எண்ணிக்கை. இதனைப் பூங்கணுத்திரையார் என்னும் பெரும் புலவர் புறநானூற்றில் அமைத்துள்ளார். பாருங்கள்.

மீனுண் கொக்கின் வெண்சிற கன்ன
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே/ கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

★